

UCSC

# ஆண்டறிக்கை 2014





## கொழும்புப் பல்கலைக்கழக
## கணினி கற்கைகள் நிறுவக

**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்**

**உள்ளடக்கம்**


| | |
|---|---|
| தொலைநோக்கும் இலக்கும் | 01 |
| பணிப்பாளரின் மீளாய்வு | 02 |
| UCSC மீதான ஓர் பார்வை | 04 |
| UCSC பற்றிய ஒரு கண்ணோட்டம் | 06 |
| ஆட்சி | 08 |
| கல்வி | 11 |
| பட்டப்படிப்பு | 11 |
| பட்டப்பின்படிப்புகள் | 24 |
| வெளிவாரிப் பட்டங்களும் விரிவாக்கல் கற்கைநெறிகளும் | 26 |
| வெளிநாட்டு மாணவர்கள் | 30 |
| புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள் | 30 |
| ஆய்வு | 31 |
| ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்கள் | 31 |
| மாநாடுகள், கருத்தரங்குக்கள் மற்றும் செயலமர்வுகள் | 33 |
| கிடைத்த விருதுகள் | 34 |
| கல்விசார் ஆளணியினர் | 35 |
| கல்விசாராத ஆளணியினர்: நிரந்தரம் (P) ஒப்பந்தம்/ஒப்படைப்பு (C/A) | 36 |
| நிதி | 39 |
| மீண்டெழும் செலவினங்கள் | 39 |
| மூலதனச் செலவினங்கள் | 39 |
| கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) | 40 |
| கருத்திட்ட செலவினங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை) | 42 |
| நிதிச்செயலாற்றல் (செலவினங்கள்) | 44 |
| நிதிச்செயலாற்றல் (உருவாக்கப்பட்ட வருமானம்) | 44 |
| நிதிச் செயலாற்றல் பகுப்பாய்வு | 44 |
| உட்கட்டமைப்பு வசதிகள் 2014 இல் பெற்றுக்கொண்டவை | 45 |
| ஏனைய விபரங்கள் / இந்த அறிக்கையுடன் தொடர்புடைய செயலாற்றல் | 46 |
| கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் - 2014(பின்பு சமர்ப்பிக்கப்படும்) | 47 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014(பின்பு சமர்ப்பிக்கப்படும்) | 51 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான UCSCயின் கருத்து 2014. (பின்பு சமர்ப்பிக்கப்படும்) | 60 |

# கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்

## 2014 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

### தொலைநோக்கும் இலக்கும்

### தொலைநோக்கு கூற்று

*கற்றல் மற்றும் ஆராய்ச்சி மூலம் புதிய அறிவியலின் எல்லைகளைக் கடந்து, கணினியிலில் உலகலாவிய முன்னோடியாக திகழ்தல்.*

### இலக்கு கூற்று

*கணினி அறிவை மேம்படுத்துதல் மற்றும் வளர்ச்சியடைச் செய்தல், உலக உபாயவழி முன்னனிகளை உருவாக்கிக்கொள்ளல், பல்துறை ஆய்வுகளை மேம்படுத்துதல், தொழிற்றுறை திறன்கள், தலைமைத்துவ பண்புகள் கொண்ட சமூக ரீதியில் பொறுப்புக் கூறுகின்ற மற்றும் சிறப்புமிகுந்த தொழில்வல்லுநர்ககளை உருவாக்குதல் மற்றும் நாட்டை பிராந்தியத்தில் அறிவுக் கேந்திர நிலையமாக ஆக்குதல் என்பவற்றுக்கு பங்களிப்புச் செய்தல்.*

### குறிக்கோள்கள்

1. கணினி கல்வியினைக் கற்பித்தலிலும் கற்றலிலும் சிறந்த நிலையமாக திகழ்தல்.
2. கணினி கல்வி தொடர்பான பல்துறை ஆய்வுகளின் எல்லையினை விரிவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
3. தொழிற்றுறைத் திறன்கள், தலைமைத்துவ பண்புகள் உள்ள, சிறப்புமிகுந்த மற்றும் சமூக பொறுப்புக்கூர் தொழில்வல்லுநர்களை உருவாக்குதல்.
4. பயன்மிகு வேலை மற்றும் தொழில் மேம்பாட்டுக்கு நன்மையளிக்கும் சூழலொன்றை உருவாக்குதல் மற்றும் அதனைப் பேணிச்செல்லல்.
5. நிறுவனம் சார் கீர்த்தியை வளர்ச்சியடைச் செய்தல்.
6. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT) ஊடாக சமூகத்தை வலுவூட்டுதல்.
7. நாட்டை அறிவுக் கேந்திர நிலையமொன்றாக ஆக்குவதற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பினை செய்தல் மற்றும் தேவையான தொழிற்றுறைசார் சேவைகளை வழங்குதல்.

## பணிப்பாளரின் மீளாய்வு

கணினிக் கல்வியில் உயர் கற்கைத்துறை நிலையம் என்ற வகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) பட்டப் படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு மாணவர்களையும் அதேபோல் தகவல் தொழில்நுட்பத் (IT) துறையினரையும் இந்தத் துறையின் நவீன அபிவிருத்திக்குப் பயிற்றுவிக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்கின்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக சேர்த்துக்கொள்ளப்பட்ட 757 உள்ளகப் பட்டதாரிகளுக்கு மீள்வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கேற்ப நான்கு பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. அத்துடன், 1,119 விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு விஞ்ஞானத் தளங்களைப் பயன்படுத்துவது தொடர்பிலான தகவல் தொழில்நுட்பப் பயிற்சியை வழங்கியுள்ளதுடன், 2,379 மாணவர்களுக்கு வெளிவாரியாக தகவல் தொழில்நுட்பமாணி (BIT) பட்டப் படிப்பினை மேற்கொள்ளவும் வாய்ப்பினை வழங்கியுள்ளது. 370 மாணவர்கள் முதுமாணிப் பட்டத்தினை பயின்று வருவதுடன், 40 பேர் ஆய்வுப் பட்டங்களுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களில் 440 பேர் பட்டப் படிப்பையும், 1 கலாநிதி மற்றும் முதுதத்துவமாணி உட்பட 111 பேர் பட்ட மேற்படிப்பையும் பூர்த்தி செய்தனர்.

முதுமாணி மற்றும் BIT வெளிவாரி பட்ட நிகழ்ச்சிகள் என்பன UCSC இன் இரு பிரதான வருமான மூலகங்களாக இருப்பதுடன், அவை முறையே 67 மி. மற்றும் 73 மி. வருமானத்தை பங்களிப்புச் செய்கின்றன. 71 மி. கட்டடங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், 37 மி. உபகரணங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அவை இரண்டுக்குமான அரச மானியம் வெறும் 15 மில்லியனே ஆகும். UCSC இனால் சர்வதேச மாநாடுகளில் பணியாளர்கள் பங்குபற்றுவதற்காக 4.9 மில்லியனாலும், பணியாட்களது காப்புறுதி திட்டத்திற்காக 4.7 மில்லியனாலும், மாணவர் இடர் நிதியத்திற்காக 2.9 மில்லியனாலும் பங்களிப்புச் செய்யப்பட்டுள்ளது.

ஏனைய பயிற்சி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) ஆய்வினூடாகப் புதிய அறிவினை உருவாக்குவதற்கு அதிக அழுத்தம் கொடுக்கிறது. ஆளணியினர் 67 மாநாட்டு மற்றும் சஞ்சிகை ஆக்கங்களை வெளியிட்டுள்ளனர். கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகமானது (UCSC) அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அமைப்புக்கள் சார்பாக ஆலோசனைக் கருத்திட்டங்களை நடத்திச்செல்லவும் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. இலங்கையில் வளர்ந்துவரும் இளம் தலைவர் விருது (Sri Lanka Emerging Young Leader Award), CIMA உலகலாவிய வியாபார சவால் விருது (CIMA Global Business Challenge) மற்றும் பத்து தலைசிறந்த இளம் நபர்கள் விருது (Ten Outstanding Young Persons awards) என்பன உட்பட தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகளில் பிரதானமான 7 விருதுகளைப் பெற்று பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் தொடர்ந்தும் திறமையான முறையில் வெற்றியினை நிலைநாட்டி வருகின்றனர். பணியாளர்கள் சமூகத்திற்கு அவர்களின் பங்களிப்பாக பல வெளிக் குழுக்கள், சபைகள் மற்றும் தொழில்சார் நிறுவனங்களில் ஈடுபடுகின்ற அதேவேளை, மாணவர்கள் கிராமப்புறப் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு தகவல் தொழில்நுட்ப பரப்புதல் நிகழ்ச்சித் திட்டங்களைகளைத் தொடருகின்றனர்.

புதிய மார்க்கங்களை தேடிச்செல்வதற்காக எமது உபாயவழித் திட்டமானது மீளமைக்கப்பட்டது. வெளிவாரிப் பட்டப்படிப்பு மற்றும் ஆய்வு வணிகமயமாக்கல் ஊடாக 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி முனைப்பினூடாக (HETC) வெற்றிகரமாக தொடருகின்ற ஆரம்பச் செயற்பாடுகளை முன்மொழிந்துள்ளது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்வி நிறுவனமானது (UCSC) அனைத்துப் பல்கலைக்கழகங்களின் மாணவர்களுக்கான பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப (IT) முன் ஆயத்த சோதனை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பான பல்கலைக்கழகத் தெரிவு மற்றும் ஒதுக்கீட்டு முறைகள் மற்றும் சவாலான பிற கருத்திட்டங்கள் போன்ற 21 ஆம் நூற்றாண்டிற்கான உயர்கல்வி முனைப்பினால் (HETC) நிதியிடப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு தொடர்ந்தும் உதவியளிக்கின்றது. UCSC இன் பணியாளர்கள் ஆய்வுக் கருத்திட்டங்களுக்கான தேசிய ஆய்வு மையத்தின் (NRC) பல மானியங்களையும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் (NSF)) மானியத்தையும் பெற்றுக்கொள்வதில் வெற்றியடைந்துள்ளனர்.

நீண்ட காலமாக செய்யப்படாதிருந்த UCSC இன் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் இவ்வாண்டிலும் தொடர்ந்து நடைபெறுவதுடன், பூர்த்திசெய்யப்பட்ட பகுதிகள் சில பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு மாணவர்களால் ஏற்கனவே பயன்படுத்தப்படுகின்றது. இது, கடந்த ஐந்து வருட காலமாக முகங்கொடுத்துவரும் இடவசதி தொடர்பிலான சில விமர்சன ரீதியான பிரச்சினைகளுக்கு பகுதியளவான தீர்வினை வழங்கும். எனினும், இன்றும் சில உட்கட்டமைப்பு மேம்படுத்தல் கருத்திட்டங்கள் ஊடாக எதிர்கால நீடிப்பு வசதிகள் மேற்கொள்ளப்படும். UCSC ஆனது நாட்டிலுள்ள மிகவும் தகுதிவாய்ந்த கணினி ஆளணியினரை வைத்திருப்பதுடன், மனித வளப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள் 20 பேரை அதன் கல்வியாளர் குழாமை வலுவூட்டுவதற்காக வைத்துள்ளது. Umea பல்கலைக்கழகத்துடன் செய்துகொள்ளப்பட்ட வெளிநாட்டு பணியாளர் மற்றும் மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டமானது தொடர்ந்து செயற்படுத்தப்படுகின்றது.

தற்போதுள்ள பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களின் பாடத்திட்டங்களை சர்வதேச தரத்திற்கு அபிவிருத்தி செய்தல் பூர்த்தியடைந்துள்ளதைத் தொடர்ந்து, எமது பட்டதாரிகளின் தொழில்வாய்ப்புத் திறனும் உயர்வடைந்துள்ளதுடன், பொறியியல் மற்றும் மருத்துவ பட்டதாரிகளின் மட்டத்திற்கு அல்லது அதைவிடவும் உயர்வான நிலையினை அடைந்துள்ளது. பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு உள்வாங்கல்களும் ஆய்வு உட்பட பட்டதாரி மற்றும் பட்டப் பின்படிப்பு பட்டதாரிகளின் வெளியீடும் இவ்வாண்டில் அதிகரித்து இருந்ததை அவதானிக்க முடிந்தது. இவ்வாண்டிலும் எமது பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்காக வெளிநாட்டு மாணவரொருவரை UCSC ஆனது உள்வாங்கிக்கொண்டது.

| | | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| **கல்வி (இணைந்தோர்/ பட்டம் பெற்றோர்)** | | | | |
| உள்ளகப் பட்டதாரி மாணவர்கள் | எல்லாம் | 738 | 769 | 757 |
| | உள்ளே | - | 254 | 212 |
| | வெளியே | 220 | 212 | 215 |
| விஞ்ஞானப் பட்டதாரி மாணவர்கள் | | 1267 | 1275 | 1119 |
| வெளிவாரி திப்ளோமா | எல்லாம் | 4166 | 4175 | 4535 |
| | உள்ளே | 2029 | 2034 | 2379 |
| | வெளியே | 654 | 611 | 515 |
| வெளிவாரி உயர் திப்ளோமா | எல்லாம் | 2390 | 2391 | 2583 |
| | உள்ளே | 974 | 714 | 721 |
| | வெளியே | 262 | 305 | 339 |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு | எல்லாம் | 1413 | 1416 | 1537 |
| | உள்ளே | 476 | 312 | 347 |
| | வெளியே | 172 | 194 | 225 |
| பட்டப் பின்படிப்பு | எல்லாம் | 523 | 303 | 370 |
| | உள்ளே | 158 | 143 | 209 |
| | வெளியே | 156 | 122 | 107 |
| விரிவாக்கல் நிகழ்ச்சிகள் | | 528 | 309 | 389 |
| **ஆய்வு** | | | | |
| ஆய்வு (முதுதத்துவமாணி/கலாநிதி) | எல்லாம் | 41/01 | 39/07 | 41/09 |
| | உள்ளே | 10 | 09 | 07/06 |
| | வெளியே | 3 | 6 | 3/1 |
| ஆய்வுக் கருத்திட்டங்கள் | எல்லாம் | 05 | 05 | 10 |
| | புதிய | 2 | 1 | 6 |
| பிரசுரங்கள் | | 68 | 70 | 67 |
| **ஆலோசனைக் கருத்திட்டங்கள்** | | | | |
| | உள்நாடு | 12 | 10 | |
| | வெளிநாடு | 01 | - | - |
| **சமூகப் பொறுப்பு நிகழ்ச்சிகள்** | | 10 | 10 | 10 |

| | | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| **ஆட்சி** | | | | |
| நிரந்தர கல்விசார் ஆளணியினர் | எல்லாம் | 37 | 36 | 40 |
| | பேராசிரியர் | 02 | 02 | 03 |
| | கலாநிதி | 19 | 20 | 20 |
| | முதுமாணி | 12 | 10 | 11 |
| நிரந்தர கல்விசார் துணை ஆளணியினர் | | 04 | 04 | 04 |
| தற்காலிக கல்விசார் ஆளணியினர் (போதனாசிரியர்கள், உதவி விரிவுரையாளர்) | | 12 | 15 | 30 |
| நிரந்தர நிருவாக மற்றும் கல்விசாரா ஆளணி | | 34 | 40 | 40 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஆளணியினர் (அமைய மற்றும் பயிலுநர் உட்பட) | | 67 | 49 | 42 |
| ஆய்வு/கருத்திட்ட ஆளணியினர் | | 10 | 11 | 27 |
| **நிதி** | | | | |
| வருட மீண்டெழும் செலவு (மில்.– இலங். ரூ.) | | 111 | 133 | 161 |
| திறைசேரி மானியம் (மீண்டெழும்) (மில்.– இல.ரூ.) உள்ளபடி | | 92 | 90 | 94 |
| திறைசேரி மானியம் (மூலதனம்) (மில். – இல. ரூ.) உள்ளபடி | | 19 | 26 | 15 |
| உழைத்த வருமானம் | | 194 | 242 | 247 |
| UCSC இன் பங்களிப்பு – பல்கலை. மானியம் (மில்லியன் – இலங்கை ரூபா) (உழைக்கப்பட்டது %) | | 31 (16%) | 88 (37%) | 185 (75%) |
| UCSC ன் வரவுசெலவுத்திட்டம் (மில்.– இலங். ரூ.) | | 246 | 363 | 577 |
| ஆய்வு/கருத்திட்டம் (மில். – இல. ரூ.) | | 5.6 | 9.3 | 9.7 |
| ஒரு ஊழியருக்கான செலவு ஒரு வருடத்திற்கு (இலங்கை ரூபா '000 ) | | 670 | 774 | 795 |
| ஒரு மாணவனுக்கான செலவு ஒரு வருடத்திற்கு (இலங்கை ரூபா '000 ) திறைசேரி மீண்டெழும் | | 151 | 152 | 190 |
| **உட்கட்டமைப்பு** | | | | |
| வாசிகசாலைப் புத்தகங்கள் | | 10,405 | 8,303 | 8,678 |
| கணினி : ஆளணியினர் | | 1:1 | | |
| கணினி : மாணவர்கள் (பொது மாணவர்கள்) (விசேட மாணவர்கள்) | | 1:4<br>1:1 | | |
| இடப் பயன்பாடு (ஊழியர்) (ச. மீ) | | 9.42 | 10.42 | |
| இடப் பயன்பாடு (மாணவர்கள்) (ச. மீ) | | 2.32 | 2.68 | |

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணினித் தொழில்நுட்ப நிறுவகம் (ICT) மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களம் (DCS) ஆகிய இரண்டையும் ஒன்றிணைத்து 1978 ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24 அ(1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கேற்ப, 1995 ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் இறுதியாகத் திருத்தப்பட்டவாறு 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 1 ஆம் திகதி உருவாக்கப்பட்டது. கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம் (UCSC) கணினி விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பவற்றில் உயர் கல்வியை வழங்குதல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்ட உயர் கல்வி நிலையமாக செயற்பட்டுவருகிறது. சட்டத்தின் கருத்துப்படி இதுவோர் உயர் கல்வி நிறுவனமாகும். கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) கட்டளைச் சட்டம் 2002 நவம்பர் 15 ஆம் திகதி வர்த்தமானியில் (வர்த்தமானி இல. 1262/32) பிரசுரிக்கப்பட்டதுடன், டிஜிடல் குற்றவியல் சட்டத்தன்மைக்கான நிலையமாக உள்ளடக்குவதற்கு திருத்தமொன்று 2011 யூலை 22 ஆம் திகதி வர்த்தமானியில் (வர்த்தமானி இல. 1715/32) மேற்கொள்ளப்பட்டது.

**சுருக்கமான வரலாறு**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணிதவியல் திணைக்களத்தில் புள்ளிவிபரவியலுக்கெனத் தனியானதொரு அலகு 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரே கணினிக் கல்வி கற்பித்தலானது முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு, பேராசிரியர் வீ.கே. சமரநாயக்கவின் வழிகாட்டலுக்கிணங்க, புள்ளிவிபரவியல் அலகானது, புள்ளிவிபரவியல் ஆலோசனை மற்றும் தரவுச் செய்முறைச் சேவை நிலையமாக விருத்தி செய்யப்பட்டது. இது பல எதிர்கால அபிவிருத்திகளுக்கு வழிகோலியது. 1985 ஆம் ஆண்டளவில் இந் நிலையமானது புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களமாக வளர்ச்சிகண்டது. இத் திணைக்களத்தின் பிரதான பணியானது புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத்தில் விசேட பட்டப்படிப்பினை நடாத்துவதாகும். இத் திணைக்களமானது கணினி விஞ்ஞானச் சிறப்புக் கற்கை நெறிகளை நடாத்தி, ஒரு வருடத்தில் 40 மாணவர்களை உருவாக்கிய போதிலும், இது வளர்ந்துவரும் கணினி விஞ்ஞானத் துறைத் (CS) தேவையை ஈடுசெய்யப் போதியளவாக இருக்கவில்லை.

1997 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நேரடியாகக் கணினி விஞ்ஞானத்திற்கு 50 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். எனினும், அச் சந்தப்பத்தில் புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களத்தின் (DSCS) கணினி விஞ்ஞான உப பிரிவானது, தனியானதொரு திணைக்களமாக மாறினால் தான் கணினி விஞ்ஞானத்துறையில் வளர்ந்து வரும் தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாக இருக்குமென பலராலும் அறியப்பட்டது. அதன் பயனாக 2001 இல், புள்ளிவிபரவியல் மற்றும் கணினி விஞ்ஞானத் திணைக்களமானது (DSCS) கணினி விஞ்ஞானத் திணைக்களம் மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் எனும் இரு திணைக்களங்களாகப் பிரிக்கப்பட்டன.

கணினி விஞ்ஞானத் திணைக்களமானது ஒரு பீடத்தின் கீழ் இயங்குவதால் முகங்கொடுக்கும் வரையறைகளை இனங்கண்டு கொண்டதுடன், அதனது எதிர்கால வளர்ச்சி விரிவாக்கத்தை அடைந்து கொள்தற்காக பலமான தொழிற்றுறை தொடர்பொன்று இருப்பதன் முக்கியத்துவத்தை விளங்கிக் கொண்டது. தொழிற்றுறை நோக்கம் கொண்ட கணினி தொழில்நுட்ப நிறுவனம் (ICT) மற்றும் அதிக எண்ணக்கரு நோக்கிலான கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினித் திணைக்களத்தையும் தந்திரோபாயமாக ஒன்றிணைப்பதன் முக்கியத்துவத்தை பல்கலைக்கழகம் விளங்கிக் கொண்டுள்ளது.

கணினி தொழில்நுட்ப நிறுவனமானது (ICT) தொழிற்றுறையினருடனும், அதேவேளை அதிகமான வெளிநாட்டு உதவி நிறுவனங்களுடனும் பலமான உறவுகளை வைத்திருந்தது. அதேபோல் ICT ஆனது வியாபார நடவடிக்கைகளில், யப்பான் சர்வதேச கூட்டுத்தாபன முகவராண்மை (JICA) சுவீடன் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மை (Sida) மற்றும் ஏனைய உதவி நிறுவனங்கள் போன்றவற்றிடமிருந்து அதிகளவிலான வளங்களைப் பெற்று அவற்றை இலகுபடுத்தியது.

இந்த இணைப்பானது கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம் (UCSC) 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 1 ஆம் திகதி பிறப்பதற்கு வழிகோலியது. பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க இதன் (UCSC) நிர்மாணப் பணிப்பாளரானதுடன், அவரது தூரநோக்குச் சிந்தனையானது UCSC ஐ பல வழிகளிலும் வெற்றியடைய வழிவகுத்தது. எல்லாவற்றின் மூலமாகவும் UCSC ஆனது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலே (ICT) சிறப்பு வாய்ந்த மத்திய நிலையமாக இலங்கையின் பல்கலைக்கழக முறைமையில் நிலைநிறுத்திக்கொள்ள முடிந்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் இடப்பரப்பானது வரையறுக்கப்பட்ட இடவசதியை கொண்டுள்ளதன் காரணமாக UCSC இனால் தற்போதுள்ள மேற்கு மற்றும் கிழக்கு கட்டடத்தொகுதியினை விஸ்தரிப்பதன் மூலமாக மேலதிக நில மற்றும் மேற்பரப்புக்களை பெற்றுக்கொள்ள முடிந்தது. அதேபோல், வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளை நிர்மாணித்ததன் மூலமாக UCSC தனது இடவதிகளை விஸ்தரித்துக் கொண்டது. தற்போது UCSC ஆனது இரு மாடிகள் கொண்ட நிருவாக மற்றும் சிற்றுண்டிச்சாலை கட்டடத்தொகுதியொன்றை நிர்மாணித்து உள்ளதுடன், பட்டதாரி மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்தோடு கேட்போர்கூடம் மற்றும் விரிவுரை மண்டபங்கள் என்பவற்றை நிர்மாணிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய நடவடிக்கைகள் மூலமாக மாணவரொருவருக்கு தனது கற்கைச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் போதுமான 3.5 சதுர மீற்றர் கற்றல் இடவசதியை உண்டாக்க இயலுமாகியுள்ளதுடன், மிக நீண்ட காலமாக இந் நிலமை 2 சதுர மீற்றரையும் விடக் குறைவாகவே காணப்பட்டது.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) நிருவாகக் கட்டமைப்பு**

இவ் வருடத்திலும் மூன்று திணைக்களங்களையும் ஆறு மத்திய நிலையங்களையும் கொண்டு தனது செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தலை தொடர்ந்து நடாத்தி வருகின்றது.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) திணைக்களங்கள்**

பட்டதாரி கல்விசார் நிகழ்ச்சித்திட்டத்திற்கான அரச நிதியினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் கொழு. பல். கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) நேரடியாகப் பெற்றுக்கொள்கிறது. ஆண்டினுள் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு பெறப்படும் நிதி போதாமையினால் உருவாக்கப்பட்ட வருமானமும் பட்டதாரி கல்விசார் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. கொழு. பல்கலை. கணினிக் கற்கை நிறுவகத்திற்கு (UCSC) மூன்று கல்விசார் திணைக்களங்கள் இருப்பதுடன் அவற்றுக்கான கல்விசார் ஆளணியினர் அவர்களது சிறப்புத்தேர்ச்சி மற்றும் கற்பித்தல் திறமை அடிப்படையில் இத் திணைக்களங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளனர். பட்டதாரி, பட்டப் பின்படிப்பு மற்றும் வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகளை கவனிப்பதற்காக நிகழ்ச்சிகளை வழங்காத மூன்று திணைக்களத் தலைவர்கள் அவற்றுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். மூன்று திணைக்களங்களும் முறையே,

1. கணினி மற்றும் புத்திக்கூர்மை முறைமைகள் (CIS)
2. தொடர்பாடல் மற்றும் ஊடகத் தொழில்நுட்பங்கள் (CMT)
3. தகவல் முறைமை எந்திரவியல் (ISE) என்பனவாகும்.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) மத்திய நிலையங்கள்**

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) பல இடைநிலை செயற்பாடுகளை மேற்கொள்கின்றது. அச் செயற்பாடுகள் ஆறு தனித்தனி மத்திய நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நிலையத்திற்கும் ஒருங்கிணைப்பாளாகள் ஒருவர் இருப்பதுடன், அவர் நாளாந்த தொழிற்பாடுகளை முகாமை செய்வார். ஆறு நிலையங்களும் பின்வருமாறு-

1. உயர்தர டிஜிடெல் பல்லூட நிலையம் (ADMTC);
2. கணினியியல் சேவைகள் நிலையம் (CSC);
3. வெளிவாரி பட்டங்கள் நிலையம் (EDC);
4. ஈ-லேனிங் நிலையம் (eLC);
5. தொழிற்றுறை அபிவிருத்தி நிலையம் (PDC);
6. டிஜிடெல் தடயவியல் நிலையம் (CDF).

## ஆட்சி

இந்த ஆண்டின் போது 2014 – 2018 ஆண்டுக்கான கூட்டாட்சித் திட்டமானது தயாரிக்கப்பட்டது. திட்டம் தொடர்பான முடிவுகளை எடுப்பதற்காக பணியாட்களுடனான பல சந்திப்புக்களும் விசேட சபைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. கல்வி, ஆய்வு, ஆலோசனை மற்றும் சமூகப் பொறுப்பு எனும் வகையில் முன்னைய சந்தர்ப்பத்தில் வகைப்படுத்தப்பட்ட பிரதான பகுதிகளில் இருந்து

UCSC இன் இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றின் அடிப்படையிலான செயல்நுணுக்கங்கள் இனங் காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் வரை அதனது போக்கானது நகர்த்தப்பட்டது.

**முகாமைத்துவம்**

கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) முகாமைத்துவமானது திணைக்களத் தலைவர்களினதும் மத்திய நிலைய ஒருங்கிணைப்பாளர்களினதும் ஒத்துழைப்புடன் UCSC இன் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. UCSC இன் சட்டவாக்க மற்றும் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பணிப்பாளர் தலைமை வகிப்பார்.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) அலுவலர்கள்**

**பணிப்பாளர்**: பேராசியர் ஜீ.என். விக்கிரமநாயக்க; **பிரதிப் பணிப்பாளர்**: பேராசிரியர் என்.டீ. கொடிக்கார (அக்டோபர் 01 வரை) மற்றும் பேராசிரியர் கே.பீ. ஹேவகமகே (நவம்பர் 01 முதல்);

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகத்தின் (UCSC) திணைக்களத் தலைவர்கள்**

**CIS**: திரு. ஜீ.பீ. செனவிரத்ன (திசம்பர் 14 வரை) மற்றும் கலாநிதி அத்துகோரல (திசம்பர் 15 முதல்); **CMT**: திரு. ஜீ.கே.ஏ. டயஸ்; **ISE**: பேராசிரியர் கே.பீ. ஹேவகமகே;

**கொழும்பு பல்கலைக்கழக கணினி கற்கை நிறுவகத்தின் (UCSC) மத்திய நிலைய இணைப்பாளர்கள்**

**ADMTC**: திரு. எஸ்.ரீ. நந்தசார; **CSC**: திரு. எல்.பீ. ஜயசிங்ஹ; **EDC**: திருமதி எஸ்.பீ. ஆரியரத்ன (செப்ரெம்பர் 15 வரை); **eLC**: கலாநிதி டீ.டீ. கருணாரத்ன; **PDC**: கலாநிதி எஸ்.எம்.கே.டீ. அருணதிலக்க; **CDF**: திரு. கே.எஸ். குணதிலக்க.

***அதிகாரங்கள்***

கற்கை நிறுவகத்தில் அதிகாரமளிப்பவர்கள் முகாமைத்துவ சபை; கல்வி பிரதிகள் குழு; கற்கைகள் சபை; கற்கை திணைக்களங்கள் மற்றும் மத்திய நிலையங்கள்.

**முகாமைத்துவ சபை**

முகாமைத்துவ சபையின் மாதாந்தக் கூட்டங்கள் 12 மற்றும் விசேட கூட்டங்கள் 2 இவ்வாண்டில் நடத்தப்பட்டன. முகாமைத்துவ சபையின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் (தலைவர்); பிரதிப் பணிப்பாளர்; திணைக்களத் தலைவர்கள் (CIS/CMT/ISE); **நியமனம் பெற்றவர்/செயலாளர், உயர் கல்வி அமைச்சு**: திரு. பியசேன ரனேபுர; **நியமனம் பெற்றவர்/நிதி அமைச்சு**: திரு. டீ.சி.ஏ. குணவர்தன; **பீடாதிபதி, விஞ்ஞான பீடம்**: பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன (சனவரி), பேராசிரியர் கே.ஆர்.ஆர். மஹானாம (பெப்பிரவரி முதல்); **கொ.பல்.கழக (UOC) நிருவாக**

**சபையின் நியமனம் பெற்றவர்கள்**: திரு. சி. மாலியத்த மற்றும் திரு. எச்.எம்.என். வரகஉல்லே (யூலை), திரு. ஆர்.ஜீ. ரூபசிங்ஹ (ஆகஸ்ட்); **கொ.பல்.கழக (UOC) செனட் சபை நியமனம் பெற்றவர்கள்**: பேராசிரியர் கே.எச். தென்னகோன் மற்றும் பேராசிரியர் பீ.எஸ்.எம். குணரத்ன; **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) நியமனம் பெற்றவர்கள்**: திரு. எஸ். முதலிகே மற்றும் தேசமானிய திரு. எம்.டீ.டீ. பீரிஸ்; **தகவல் தொழில்நுட்பத் (IT) துறை பிரதிநிதிகள்**: திரு. மனோ சேகரம் மற்றும் திரு. டீ.பி. சபரமாது; **UCSC இன் கல்வி பிரதிநிதிகள் குழு நியமனம் பெற்றவர்கள்**: கலாநிதி டீ.என். ரணசிங்ஹ, கலாநிதி ஜீ.டீ.எஸ்.பீ. விமலரத்ன, கலாநிதி டீ.ஏ.எஸ். அத்துகோரல; முன்னாள் பணிப்பாளர் (அழைக்கப்பட்டவர்): கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ.

முகாமைத்துவ சபைக்கு இரு உப குழுக்களான நிதி மற்றும் முகாமை குழு, கணக்காய்வுக் குழு என்பன உதவுகின்றன. வருடத்தினுள் இரு குழுக்களினதும் முறையே 04 மற்றும் 04 கூட்டங்கள் நடைபெற்றன. இரு குழுக்களினதும் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளன.

**நிதி மற்றும் முகாமைத்துவ குழு**

பணிப்பாளர் (தலைவர்); பிரதிப் பணிப்பாளர்; திரு. பியசேன ரனேபுர; திரு. டீ.சி.ஏ. குணவர்தன்; பேராசிரியர் கே.ஆர்.ஆர். மஹானாம; தேசமானிய திரு. எம்.டீ.டீ. பீரிஸ்.

**கணக்காய்வுக் குழு**

திரு. சுஜீவ முதலிகே (தலைவர், நிதி நிபுணவியலாளர்), பிரதிப் பணிப்பாளர், திரு. சி. மாலியத்த; திரு. பியசேன ரனேபுர; திரு. டீ.சி.ஏ. குணவர்தன, Ms. எஸ். சுனந்தா (கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதி), உள்ளக்க் கணக்காய்வாளர்கள் (E & Y).

**கல்வி பிரதிநிதிகள் குழு**

கல்வி பிரதிநிதிகள் குழுவின் 11 கூட்டங்கள் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன. கல்வி பிரதிநிதிகள் குழுவின் உள்ளடக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர்; பிரதிப் பணிப்பாளர்; திணைக்களத் தலைவர்கள் (CIS/CMT/ISE); மத்திய நிலைய இணைப்பாளர்கள் (ADMTC/CSC/EDC/eLC/PDC); **நியமனம் பெற்றவர் (விஞ்ஞான பீடம்)**: பேராசிரியர் ஆர்.டீ. விஜேசேக்கர; **பிரதிநிதிகள்/ தகவல் தொழில்நுட்பத்துறை (IT)**: கலாநிதி ஆர்.ஏ.சி. ரணசிங்ஹ; சிரேஷ்ட கல்வியாளர்கள் (UCSC); **கற்பித்தல் பணியாளர்கள் இருவர்**: திரு. எம்.பீ.எம்.கே. சில்வா, கலாநிதி ரீ.எம்.எச்.ஏ. யூசுப்.

**கற்கைகள் சபை**

IUD, RHD மற்றும் EEP எனும் பெயரில் மூன்று கற்கை சபைகள் காணப்படுகின்றன. அவை உள்ளக பட்டதாரிப் பட்டங்கள் (IUD), ஆய்வு மற்றும் உயர் பட்டங்கள் (RHD) அத்துடன் வெளிவாரி மற்றும்

நீடிப்பு நிகழ்ச்சிகள் (EEP) என்பனவாகும். இந்த வருடம் இச் சபைகள் மூன்றும் முறையே 10, 11 மற்றும் 11 கூட்டங்களை நடத்தியுள்ளன.

## கல்வி

### நிகழ்ச்சித்திட்டங்களும் மாணவர்களும்

கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) பல்வேறு மட்டங்களில் விரிவான முறையில் பல வகைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துகின்றது. UCSC இனால் நடாத்தப்படும் கற்கைநெறிகளை (நிகழ்ச்சித்திட்டங்களை) மாணவர்கள் மற்றும் ஈடுபட்டுள்ள ஆளணியினருடன் அட்டவணை 1 இனங்காட்டுகிறது

அட்டவணை 1 : வழங்கப்படும் கற்கைநெறிகள் வகை

| கற்கைநெறி | மொத்த மாணவர்கள் | மொத்தக் கல்விசார் ஆளணியினர் | மொத்தக் கல்விசாரா ஆளணியினர் |
|---|---|---|---|
| பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு | 1,125 | 64 | 62 |
| ஆய்வு மற்றும் ஏனைய கருத்திட்டங்கள் | 49 | 19 | 25 |
| விரிவாக்கல் கற்கைநெறிகள் | 389 | 33 | 25 |
| வெளிவாரிப் பட்டப்படிப்பு | 8,655 | 48 | 39 |
| இணையம் மூலம் | 16,278 | 4 | 9 |
| ஏனையவை - விஞ்ஞான பீடம் | 1,119 | 21 | 2 |

### பட்டப் படிப்பு

பட்டதாரிகளுக்கான கணினிக் கல்வியானது முதன்முறையாக 1967 இல் விஞ்ஞான பீடத்தின் ஒரு பகுதியாக அறிமுகப்படுத்தப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC), 1,119 விஞ்ஞான பீட மாணவர்களுக்கு இந்த வாய்ப்பினை வழங்கி வருகிறது. 1990 இல் கணினியியல் ஒரு பட்டமாக ஆரம்பிக்கப்பட்டது. எல்லாமாக 1,876 மாணவர்கள் UCSC இனால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். UCSC ஆனது தற்போது 486 மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானம் (CS) பட்டப்படிப்பையும், 271 மாணவர்களுக்கு தகவல் முறைமைகள் (IS/ICT) பட்டப்படிப்பையும் வழங்கி வருகின்றது.

### உள்வாரிப் பட்டங்கள்

பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் உத்தேச மீளமைத்தலானது பல்கலைக்கழக மானியங்கள் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் அமுலாக்கமானது 2012/2013 கல்வியாண்டிலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.

பின்வரும் பட்டதாரிப் பட்டங்களை வழங்கும் வகையில் கணினி விஞ்ஞான இளமாணிப் பட்டமானது மீளமைக்கப்பட்டது. உலகளாவிய ரீதியிலான தகவல் தொழில்நுட்பம் (IT), தகவல் முறைமை (IS) மற்றும் கணினி விஞ்ஞானத் தொழில்வல்லுநர்களுக்கான பெருமளவான கேள்வியினை ஈடுசெய்வற்கு மேலதிகமாக, எதிர்பார்க்கப்படும் பட்டதாரித் தகைமைகளை அடைந்துகொள்ளும் வகையிலும் மற்றும் IEEE/ACM பாடத்திட்ட சிபாரிசுகளுக்கு இணங்கும் வகையிலும் உத்தேச பாடத்திட்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது.

(i) கணினி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணிப் பட்டம் (BSc in CS) – மூன்று வருடம்.
(ii) கணினி விஞ்ஞானம் பற்றிய விஞ்ஞானமாணி சிறப்பு பட்டம் (BSc Hons. in CS) – நான்கு வருடம்.
(iii) மென்பொருள் பொறியியல் பற்றிய விஞ்ஞானமாணி சிறப்பு பட்டம் (BSc Hons. in SE) – நான்கு வருடம்.

வியாபாரத் தேவைகளுக்கும் தொழில்நுட்பத் தீர்வுகளுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்புவதற்காக புதியதொரு வகை தகவல் தொழில்நுட்ப (IT) தொழில்வல்லுநர்களை உருவாக்கும் வகையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி நிகழ்ச்சியானது (BICT) தகவல் முறைமைகள் இளமாணி பட்டமாக மீளமைக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் முறைமைள் (IS) பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது புதிய வகை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) வல்லுநர்களை உருவாக்குவதற்காக வடிமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியின் பாடத்திட்டமானது தொடர்பாடல் மற்றும் குழுவேலை போன்ற மென்திறன்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன.

இந்த நிகழ்ச்சியின் கீழ் பின்வரும் பட்டதாரிப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன:-
(i) தகவல் முறைமைகள் பற்றி விஞ்ஞானமாணிப் பட்டம் (BSc. in IS) – மூன்று வருடம்.
(ii) தகவல் முறைமைகள் பற்றிய விஞ்ஞானமாணி சிறப்புப் பட்டம் (BSc. Hons. In IS) – நான்கு வருடம்.

பட்டப்படிப்பு நிகழ்ச்சியானது தற்போதுள்ள 3 வருட மற்றும் 3+1 (4 வருட) நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக 2+1 (3 வருட) மற்றும் 2+2 (4 வருட) பட்டங்களாக மீளமைக்கப்பட்டுள்ளன. புதிய தகவல் முறைமைகள் (IS) பிரிவு நிகழ்ச்சி தற்போதுள்ள 3 மற்றும் 4 வருட கணினி விஞ்ஞான (CS) நிகழ்ச்சிக்கு மேலதிகமாக 4 வருட மென்பொருள் பொறியியல் (SE) கற்கைத் துறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேற்படி மாற்றங்களுக்கு ஏற்ப கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகமானது (UCSC) வழமையாக வழங்கும் நான்கு உள்ளகப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக 2014 இல் இருந்து ஆறு நிகழ்ச்சிகளை வழங்கவேண்டியுள்ளது.

2014 ஆண்டு செயற்படுத்தப்பட்ட கணினி விஞ்ஞானப் பிரிவு பட்டதாரி நிகழ்ச்சியின் கீழ் 1ஆம் மற்றும் 2ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (BSc. in CS) பட்டமும், 3ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கணினி விஞ்ஞான இளமாணி (BCS) பட்டமும் நடாத்தப்பட்டன. 4ஆம் ஆண்டு மாணவர்களுக்காக கணினி விஞ்ஞானத்தில் இளமாணி (BSc. in CS)

பட்டமும் நடாத்தப்பட்டன. கணினி விஞ்ஞான (CS) பிரிவிற்காக உயர் தர (A/L) பௌதிக விஞ்ஞான துறையிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட அதேவேளை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பட்டப் படிப்பு பிரிவு சகல துறைகளை சேர்ந்தவர்களுக்கும் திறந்துள்ளது.

தகவல் முறைமைகள் பிரிவின் கீழ், 1ஆம் மற்றும் 2ஆம் ஆண்டு மாணவர்களுக்காக விஞ்ஞானத்தில் தகவல் முறைமைகள் இளமாணி (BSc. in IS) பட்டமும், 3ஆம் ஆண்டு மாணவர்களுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி (BICT) பட்டமும் கற்பிக்கப்படுகிறது. 4ஆம் ஆண்டு மாணவர்களுக்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞான இளமாணி (BSc. In ICT) பட்டம் கற்பிக்கப்படுகிறது. இந்த நிகழ்ச்சியின் பாடத்திட்டமானது தொடர்பாடல் மற்றும் குழுவேலை போன்ற மென்திறன்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. உயர் தர அனைத்துப் பிரிவு மாணவர்களுக்கும் திறந்துவிடப்பட்டுள்ளதனால், மாணவர்கள் தகைமை பெறுவதற்கு நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அடுத்த ஆண்டுக்குரிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நுண்ணறிவுப் பரீட்சை யூன் மாதம் 22ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், அப் பரீட்சைக்கு 1355 மாணவர்கள் தோற்றினர்.

UCSC ஆனது தமது பட்டதாரிக் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக UGC இன் நிலையான குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பித்தது. UGC ஆனது இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டதாரிக் கற்கை நெறிகளுக்கான அனுமதிகள் 2013/2014 தொடர்பாக புத்தகமொன்றைப் பிரசுரித்திருந்தது. அவர்கள் எமக்கு எவ்விதமான அறிவிப்பும் செய்யாமலே எமது உள்வாங்கலை 240 இருந்து 275 (கணினி விஞ்ஞானம் 175; தகவல் முறைமை 100) என்பதாக உயர்த்தியிருந்தது.

**உள்வாங்கல்**

2013/2014 உள்வாங்கலின் கீழ் UCSC ஆனது கணினி விஞ்ஞான பட்டப்படிப்புக்கு 143 மாணவர்களைச் சேர்த்துக்கொண்ட அதேவேளை, தகவல் முறைமைகள் பட்டப்படிப்புக்கு 69 மாணவர்களை சேர்த்துக்கொண்டது. UCSC இல் 2014 ஆண்டில் பதிவுசெய்து கொண்ட மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 757 ஆக இருந்தது. இதுபற்றிய வகைப்படுத்தல்கள் அட்டவணை – 2 இல் தரப்பட்டுள்ளன. அநேகமான மாணவர்கள் அவர்களின் 3ஆம் ஆண்டு தொழிலிலமர்த்துதல் முடிவடைவதற்கு முன்பே தகவல் தொழில்நுட்பத் தொழிற்றுறையில் கீர்த்திமிக்க நிறுவனங்களால் பயனளிக்கத்தக்க ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதை அவதானிக்க முடிந்தது.

அட்டவணை 2 : உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2013 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி | 143 | 143 | 149 | - | - | 292 | - |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞானமாணி | - | - | - | 154 | - | 154 | 103 |
| கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி | 40 | - | - | - | 40 | 40 | 39 |
| தகவல் முறைமையில் விஞ்ஞானமாணி | 69 | 69 | 101 | - | - | 170 | - |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணி | - | - | - | 78 | - | 78 | 53 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் | 23 | - | - | - | 23 | 23 | 20 |
| **UCSC இன் பட்டதாரி** | **275** | **212** | **250** | **232** | **63** | **757** | **215** |
| விஞ்ஞானமாணி, விஞ்ஞானப் பீடம் | - | 474 | 349 | 262 | 34 | 1119 | - |
| **உள்வாரிப் பட்டதாரி மாணவர்கள்** | **275** | **686** | **599** | **494** | **97** | **1876** | **215** |

எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலமாகவே நடைபெறும்.

**வருகைதரும் ஆளணியினர்**

உள்வாரிப் பட்டப்படிப்பை வழங்குவதில் எல்லா கல்விசார் மற்றும் கல்விசார் ஆதரவு பணியாளர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) பட்ட நிகழ்ச்சியில் வெளியக வளங்களை வேண்டி நிற்கும் பாடநெறிகள் பல உள்ளடங்கியுள்ளன. 10 தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தகவல் முறைமைகள் (ICT/IS) பட்டப் பாடநெறிகளையும் ஒரு கணினி விஞ்ஞான (CS) பட்டப் பாடநெறியையும் நடாத்துவதற்கு வருகைதரும் விரிவுரையாளர்கள் 13 பேரை அழைத்துள்ளது.

## தொழிற்றுறையில் அமர்த்துதல்

தொழிற்றுறை அபிவிருத்தி நிறுவனமானது (PDC), தகவல் தொழில்நுட்ப தொழிற்றுறையுடன் நெருங்கிய உறவு மற்றும் பட்டதாரிகளின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்காக கல்வி நிகழ்ச்சிகளின் முன்னேற்றத்தை தொழிற்றுறை தொடர்பின் ஊடாக தொடர்ச்சியாக பேணிச்செல்கிறது. PDC ஆனது இவ்வாண்டில் அவர்களது 6 மாதப் பயிற்சிக்காக பட்டதாரி மாணவர்கள் 230 பேரை UCSC கருத்திட்டங்கள் 9 உள்ளடங்களாக 70 நிறுவனங்களில் அமர்த்தியுள்ளது. இதில், Linnaeus-Palme மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் Umea பல்கலைக்கழகத்துடன் UCSC மாணவர்கள் இருவர் இணைப்புச் செய்யப்பட்டதும் உள்ளடங்கும். Umea பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் இலங்கையில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைப்புச் செய்யப்பட்டனர். பட்டதாரியான பின்னர் தொழிற்றுறையில் நிபுணரொருவராக எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பதை பட்டதாரி மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக சிறப்புக் கருத்தரங்கு தொடர்களை PDC ஆனது கம்பனிகளில் சுயமாக நடாத்த ஏற்பாடு செய்கிறது. இம் மாணவர்கள் இருவருக்கும் கடன் வசதிகள் ஏற்பாடு செய்துகொடுக்கப்பட்டது. பட்டதாரி மாணவர்கள் உள்ளகப் பயிற்சிக்கு அனுப்பப்பட முன்னர் சூழ்நிலைக்கு தக்கவாறு செயற்படுதல் மற்றும் தயார்படுத்தப்படுதல் போன்ற சிறந்த விரிவுரைகள் மூலமாக வழங்கப்படுகின்றன. அவர்களின் உள்ளகப் பயிற்சியின்போது எதிர்பார்க்கப்படும் குறிக்கோள்களும் திறன்களும்

தெளிவாகக் கலந்துரையாடப்படுகின்றன.

தொழிற்றுறைப் பயிற்சிக்கு மேலதிகமாக PDC இனால் பட்டத்தைப் பூர்த்திசெய்யும் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்கும் அதேவேளை, அவர்களுக்கான மென்திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், தொழில்நுட்ப – கலந்துரையாடல் அமர்வுகள் மற்றும் பயிற்சி நேர்முகப்பரீட்சை வாய்ப்பு என்பவற்றையும் ஏற்பாடுசெய்து கொடுத்தது.

யூன் மாதம் 16 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வார நாட்களில் பி.ப. 4.30 இலிருந்து பி.ப. 7.30 வரை MIT Global Start up அமர்வு UCSC இல் நடாத்தப்பட்டது. ஐக்கிய அமெரிக்காவின் MIT நிறுவனத்தின் 4 பயிற்சியளிப்போர்களினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் UCSC இன் இரு குழுக்கள் பங்குபற்றின.

**விடுதி**

கொழும்புப் பல்கலைக்கழகத்தினால் கடைப்பிடிக்கப்படும் கொள்கைக்கு இணங்கச் செயலாற்றி, இவ் வருடமும் இருப்பிட வசதிகள் மிகவும் தேவையுள்ள 1ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் அதேபோல், தேவையுள்ள 3ஆம் மற்றும் 4ஆம் ஆண்டு மாணவர்களுக்கும் இருப்பிட வசதிகள் UCSC இனால் வழங்கப்பட்டன. இதற்காக பின்வரும் விடுதிகள் வாடகைக்கும் குத்தகைக்கும் எடுக்கப்பட்டன. முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான ஆண்கள் விடுதி கிருலப்பனையில் இருந்தது பின்னர் பத்தரமுல்லைக்கு கொண்டுசெல்லப்பட்டது மற்றும் முதலாம் ஆண்டு மாணவிகளுக்கான பெண்கள் விடுதி என்பன தனித் தனியே 38 மாணவ மாணவிகளுக்கு தங்குமிட வசதியினை வழங்கியுள்ளதுடன், விடுதி பாதுகாப்பாளரொருவரையும், உதவி விடுதிப் பொறுப்பாளரொருவரையும் கொண்டுள்ளது. புதிய விடுதியொன்றை நிர்மாணிக்கும் பணிக்காக பொருத்தமான காணியொன்றைத் தேடும் நடவடிக்கைகள் இவ்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சமர்ப்பிக்கப்பட்ட அதிகமானவற்றின் விலைகள் எமது வரவு செலவுத் திட்டத்தை விட கூடுதலாக காணப்பட்டதால் அம் முயற்சியில் இதுவரை வெற்றியை அடைந்துகொள்ள முடியவில்லை.

***சிற்றுண்டிச்சாலை***

பல்கலைக்கழக வளாகத்தினுள் தற்போது இயங்கிவரும் பல சிற்றுண்டிச்சாலைகளுக்கு மேலதிகமாக, மீளாய்வாண்டின் போது UCSCஆனது விசேடமாக தனது மாணவர்களுக்கென தனியானதொரு சிற்றுண்டிச்சாலையினை பேணிச்சென்றது. புதிய சிற்றுண்டிச்சாலையை நிர்மாணிப்பதற்காக கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட நிர்மாணிப்பு பணிகள் இவ் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டன. இப் புதிய சிற்றுண்டிச்சாலையானது, மாணவர்கள் 120 பேருக்கு வசதியளிக்கும் வகையிலும் உணவுகள் பரிமாறுவதற்கும் தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும் இணையத்தில் பிரவேசிப்பதற்கும் உரிய வசதிகளை வழங்குகின்றது.

**உளவள செயற்பாடுகள்**

மாணவர்கள் சகலருக்கும் நான்கு மாணவ உளவளவாளர்களின் (ஒரு விரிவுரையாளர் மற்றும் மூன்று

சிரேஷ்ட விரிவுரையாளர்கள்) சேவை வழங்கப்படுகின்றது. அத்துடன், ஆலோசனை தேவையான மாணவர்கள் வாரத்தில் 3 மணித்தியாலங்களுக்கு தொழில்வாண்மை உளவளவாளரொருவரின் சேவையைப் பெற்றுக்கொள்ள வசதியளிக்கப்பட்டுள்ளது.

## பட்டப் படிப்பு மாணவர்களுக்கான நிதியுதவி

மஹாபொல புலமைப்பரிசில், உதவித்தொகை, தொழிற்றுறை புலமைப்பரிசில் மற்றும் தனிப்பட்ட புலமைப்பரிசில் போன்ற வகைகளில் மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

### மஹாபொல புலமைப்பரிசில்

வர்த்தக மற்றும் நுகர்வோர் அலுவல்கள் அமைச்சினது மஹாபொல நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையுடன் 329 மாணவர்களுக்கு மஹாபொல புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன. விசேட மற்றும் சாதாரண புலமைப்பரிசில்களின் பெறுமதி முறையே ரூ. 2,550/= மற்றும் ரூ. 2,500/= ஆகும்.

### உதவித்தொகைகள்

உதவித்தொகைக்கு தகுதியான மாணவர்களை தெரிவு செய்வதை விளக்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைக்கு ஏற்ப உதவித்தொகைகள் வழங்கப்பட்டன. 2014இல் உதவித்தொகைகளைப் பெற்ற மாணவர்களின் விவரம் பின்வரும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளது. முழுமையான உதவித்தொகை மற்றும் அரை-உதவித்தொகை என்பவற்றின் பெறுமதி முறையே ரூ. 2,000/= மற்றும் ரூ. 1,900/= ஆகும்.

### விடுதி வசதிகள்

3 ஆம் ஆண்டு மாணவர்கள் தொழிற்றுறையில் ஈடுபடுத்துவதற்காக அரையாண்டை செலவிடுவதன் காரணமாக, 1 ஆம் ஆண்டு மாணவர்களுக்காக மாத்திரம் வழக்கமாக விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. வெற்றிடங்கள் நிலவியதால் இவ் வசதிகள் 3ஆம் வருட மாணவர்களுக்கும் திறந்துவிடப்பட்டுள்ளது.

மஹாபொல, உதவித்தொகை மற்றும் விடுதிவசதி என்பவற்றைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வம் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| உள்வருகை ஆண்டு | கற்கும் ஆண்டு | மஹாபொல புலமைப்பரிசில் வழங்கப்படுவோர் | உதவித்தொகை பெறுவோர் | விடுதி வசதிகள் |
|---|---|---|---|---|
| 2013 | 1ஆம் | 82 (39%) | 12 (06%) | 49 (23%) |
| 2012 | 2ஆம் | 117 (47%) | 39 (16%) | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 2011 | 3ஆம் | 108 (37%) | 26 (11%) | 22 (09%) |
| 2010 | 4ஆம் | 22 (35%) | 04 (06%) | - |

### தொழிற்றுறை புலமைப்பரிசில்கள்

**BSharp; IFS R&D** லிமிடெட் (**IFS**); மற்றும் **MIND** எனும் பெயருடைய மூன்று வெளிவாரி நிறுவனங்கள் தேவையுள்ள மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு அனுசரணை வழங்கின.

### 'சொரியா றோபஸ்ரா' புலமைப்பரிசில்

முன்னாள் கணினி விஞ்ஞான விசேட பட்ட நிகழ்ச்சி பட்டதாரி சங்கத்தினால் நான்காம் வருட பட்டதாரி மாணவர்களுக்காக 'சொரியா றோபஸ்ரா' எனும் பெயருடைய விசேட புலமைப்பரிசில் 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. 2013 ஆம் ஆண்டு இதன் கீழ், இரண்டு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டதுடன், இப் புலமைப்பரிசிலின் பெறுமதி கல்வியாண்டின் 10 மாதங்களுக்கு 2,500/= ரூபா மாதாந்தம் கொண்டதாகும். இதற்காக தகுதியானவர்கள் கல்விசார் செயற்திறன் மற்றும் நிதியுதவி தேவைப்பாட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றனர்.

### UCSC மாணவர் சங்கம்

2002 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவக (UCSC) கட்டளைச்சட்டத்தின் 25 மற்றும் 26 ஆம் உபபிரிவுகளின் பிரகாரம் மாணவர் சங்கத்தின் 2012/13 ஆண்டுக்கான தேர்தல் நடைபெற்றதுடன், நிருவாகக்குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. டீ.வீ.பி.சீ ஜயசிங்ஹ; உப தலைவர்: திரு. எஸ்.எல்.ஆர். த சில்வா; செயலாளா: திரு. கே.எம்.எஸ்.ஏ. கல்லொர; பதிப்பாசிரியர்: திரு. டீ.எம்.பீ. டங்கல்ல; கனிஷ்ட பொருளாளர்: எம்.ஜீ.டீ. மதுசங்க; குழு அங்கத்தவர்கள்: திரு. ஜீ.என். வனிகசிங்ஹ; திரு. ரீ. ஜயனாத்; திரு. எம்.எப். ஜலில்; திரு. டபிள்யூ.ஏ.எம்.எஸ். வீரசூரிய; திரு. பி.என். தஹநாயக்க; திரு. ரீ.எஸ். சஹாநாயக்க; திரு. சி.பீ. ராஜபக்ஷ; திரு. ஏ.ஏ.எம். ஹப்ஸர். திரு. எம்.ஜீ.என்.ஏ.எஸ். பெர்னாந்து சிரேஷ்ட பொருளாளர் பதவியை தொடர்ந்து வகிக்கின்றார்.

### மாணவர்களின் செயற்பாடுகள்

பிரதானமாக கலாசாரம், சம்பிரதாயம் மற்றும் பொழுதுபோக்கு என்பவற்றை மேம்படுத்துவதற்காக மாணவர் சங்கங்களினால் மாணவர் செயற்பாடுகள் நடாத்தப்பட்டன. மார்ச் மாதம் விதுநெதன தம் சிசில நிகழ்ச்சி; ஏப்பிரல் 4 இல் பிரித் ஓதல் வைபவம்; மே 2 இல் புத்தாண்டு விழா நடாத்தப்பட்டதுடன், வெசக் தினத்தை முன்னிட்டு மே 11 இல் மாணவர்களும் அதேபோல் பணியாளர்களும் பக்தி கீத நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்துடன், மாணவர்கள் UCSC இனது சிற்றுண்டிச்சாலையின் அருகாமையில் விளக்குகளுடனான பாரிய வெசக் கூடொன்றை அமைத்திருந்ததுடன், 300 மேற்பட்ட சிறிய விளக்குகள் கொண்டு கொழும்புப் பல்கலைக்கழகத்தில்

அமைக்கப்பட்ட அலங்காரத்திற்கும் பங்களிப்பு செய்தனர். பேராசிரியர் சமரநாயக்க அவர்களின் மறைவு தினத்தை நினைவு கூறும் வகையில் யூன் 3 இல் “நற்போதனை சொற்பொழிவு” நிகழ்வொன்றை ஒழுங்கு செய்தனர். மேலும், யூன் மாதம் பொசன் வைபவத்தையும் (Shakyasinha Guna Gee Dahana), புற்றுநோய் வைத்தியசாலைக்கு நன்கொடையளித்தல் நிகழ்வொன்றையும் ஏற்பாடு செய்ததுடன், யூலை மாதம் கிரிக்கெட் போட்டித்தொடரையும், செப்ரெம்பர் 18 இல் விளையாட்டுப் போட்டி தினமொன்றையும், செப்ரெம்பர் 24 இல் பாரமிதா இரத்த தான நிகழ்ச்சியொன்றையும் மாணவர்கள் ஒழுங்குசெய்தனர். அத்துடன், நவம்பர் 8 இல் புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்ச்சியை UCSC மாணவர்கள் ஒழுங்குசெய்து நடாத்தினர். நவம். 24 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வர்ண இரவு (colours night) நிகழ்வில் UCSC மாணவர்கள் பலர் கௌரவிக்கப்பட்டனர். திசம்பர் 4 இல் பல்கலைக்கழகக் கல்வியை பூர்த்திசெய்துவிட்டு செல்லும் மாணவர்களால் கல்விசார் பணியாளர்களுக்கு இராப்போசன விருந்தொன்று வழங்கப்பட்டது; பிரியாவிடை வைபவம்; கிறிஸ்மஸ் மடுவம் மற்றும் கரோல் கீதம்; நவம்பர் மாதம் வாணி விழா கொண்டாடப்பட்டது. இச் செயற்பாடுகளில் மாணவ குழுச் சுற்றுலாவும் உள்ளடங்கும். கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கை (UCSC) நிறுவக மாணவர்கள் பல செயலமர்வுகளை UCSC இலும், கல்விப் பொதுத்தராதர (சா/த) மற்றும் (உ/த) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உதவுவதற்காகப் பாடசாலைகளிலும் நடாத்தியது. அத்துடன் மாணவர்களால் அநுராதபுரத்திலுள்ள கஷ்டப் பிரதேச பாடசாலையொன்றில் கணினி சம்பந்தமான செயலமர்வொன்றையும் நடாத்தியதுடன் கணினியொன்றையும் அன்பளிப்புச் செய்ததது.

**மாணவர்களின் அடைவுகள்**

UCSC இன் ஹர்ஷ பெரேரா அவர்களால் **இலங்கையில் வளர்ந்துவரும் இளம் தலைவர் விருது** (EYLA-2014) **(Sri Lanka Emerging Young Leader Award)** வென்றெடுக்கப்பட்டது. மாபெரும் இறுதிப் போட்டியானது யூன் 27 ஆம் திகதி மஹரகம, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடாத்தப்பட்டது.

யூன் மாதம் 21 ஆம் திகதி நடாத்தப்பட்ட CIMA உலகலாவிய வியாபார சவால் 2014 (CIMA Global Business Challenge) நிகழ்வில் இலங்கை சம்பியன் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப்படுத்திய கூட்டாட்சி உசாத்துணை குழு கைப்பற்றியது. போட்டியில் சிறந்த பேச்சாளராக பீ. சமரகோன் (UCSC) தெரிவு செய்யப்பட்டதுடன், எஸ். அபேயசிறிகுணவர்தன (UCSC), எஸ். ஹேரத் (முகாமைத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) மற்றும் பி. அவந்தி (விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) ஆகியோர் குழு அங்கத்தவர்களாக இருந்தனர். இந்தியாவின் மும்பை நகரில் ஆகஸ்ட் மாதம் முதலாவது வாரத்தில் நடாத்தப்பட்ட **CIMA உலகலாவிய வியாபார சவால்** 2014 **(CIMA Global Business Challenge)** உலகலாவிய இறுதிச் சுற்றில் **(Global Finals)** இக் குழு இலங்கையைப் பிரதிநிதித்துவப் படுத்தியதுடன் வெற்றியாளர்களாகவும் ஆகினர். நவம்பர் மாதம் 12 ஆம் திகதி நடாத்தப்பட்ட CIMA நிறுவகத்தின் வியாபார விடயம் சார்

விருதுகள் வழங்கும் இரவில் உலகலாவிய CIMA வெற்றியாளர்கள் பாராட்டப்பட்டதுடன், அவர்களில் இருவர் UCSC நிறுவகத்தைச் சேர்ந்தவர்களாகும்.

மாணவர்கள், மூன்றாம் நிலை கல்வி (வியாபார) பிரிவுக்கான **தேசிய சிறந்த தர ICT** (NBQSA) **(National Best Quality ICT Awards)** விருதுகளை வென்றெடுத்தனர். NBQSA தங்க விருது பீ.என். பீரிஸ், எம்.எச். பெரேரா, எம்.எஸ். குமாரகே, டீ. சந்தன ஆகியோர்களால் "ta.lk – பொதுமக்கள் முறைப்பாடு செய்தல் முறைமை என்பதற்கும்; மூன்றாம் நிலை கல்வி (வியாபார) பிரிவுக்கான NBQSA வெண்கல விருது – ஜீ.டபிள்யூ. வாகிஸ்ட, எஸ்.ஜே. அபயரத்ன, ஜீ.ரீ. மென்டிஸ் ஆகியோரால் "Alco இனங்காணுதல்: குரல் உச்சரிப்புத்தொனியின் விளைவு மற்றும் பிரதிபளிப்பு நேர மாற்றங்கள் ஊடாக இலங்கையர்களிடையே மதுசார போதையின் அளவை அறிதல்" என்பதற்கும்; மூன்றாம் நிலை கல்வி (தொழில்நுட்ப) பிரிவுக்கான NBQSA சிறப்பு விருதுகள் இரண்டு – வை.சம்பத் என்பவரால் "ஒலிசார்ந்த எதிரொலி இடங்கள் ஊடாக தடைகளை வகைப்படுத்தல்" என்பதற்கும்; ரீ.எஸ்.ஆர். பீரிஸ், ஆர்.ஏ. அமரசிங்ஹ, எல்.கே. சிவகனேஷன், ரீ.எல். செனவிரத்ன, ஜீ.எம். பிரியங்கர ஆகியோரால் "Sens" என்பதற்கும்; மூன்றாம் நிலை கல்வி (வியாபார) பிரிவுக்கான NBQSA திறமை விருது "Sasthara" என்பதற்கும் வென்றெடுத்தனர்.

**Imagine Cup** பல்கலைக்கழக மாணவர்களிடையே பல்வேறு பிரிவுகளின் கீழ் வருடாந்தம் நடாத்தப்படும் போட்டி நிகழ்ச்சியாகும். விளையாட்டுக்கள் சார்பான பிரிவில் பி. செனாரத்ன, எம். விஜேவிக்ரம, பீ. சமரகோன் மற்றும் எஸ். குணசிங்ஹ ஆகியோரின் - Fat and Thin Studios "Bird Academy" ஆக்கம் World Citizenship பிரிவில் இரண்டாம் இடத்தை வென்றெடுத்து. வை.கே. லொகுகே (அணித் தலைவர்), பீ. மதுமல், ரீ. குமார, டீ. ரணசிங்ஹ ஆகியோரின் - Techsurge "Navisys" மற்றும் We_Cobraz "V-Detector" புத்தாக்கம் பிரிவில் மூன்றாம் இடத்தை வென்றெடுத்தது.

**IEEE Extreme** 8.0 உலகலாவிய நிகழ்ச்சித்திட்டமிடல் போட்டியானது 280 மாணவர்களின் (86 அணிகள்) பங்குபற்றலுடன் அக்டோபர் 18 ஆம் திகதி 24 மணித்தியாலம் UCSC இல் நடாத்தப்பட்டது. UCSC இன் சிறந்த அணிகளால் இதுவரை Extreme வரலாற்றில் பெற்றுக்கொள்ள இயலுமான மிகக் கூடிய தர நிலையை அடைந்துகொள்ள முடிந்தது. எமது சிறந்த அணி "Freakz" இலங்கையில் 7 வது இடத்தையும், உலக மட்டத்தில் 109 வது இடத்தையும் பெற்றுக்கொண்டது. எமது 4 அணிகள் உலகின் முதல் 200 அணிகளுக்குள் உள்வருவதற்கு இயலலுமானது.

மாலபே SLIIT நிறுவகத்தில் அக்டோபர் 23-24 திகதிகளில் நடைபெற்ற **Code Fest** 2014 நிகழ்வில் UCSC இன் மாணவர்கள் முதலாம் இடத்தைக் கைப்பற்றியதுடன், தங்கப் பதக்கத்துடன் ரூ. 70,000 பணப் பரிசையும் வென்றெடுத்தனர். தங்கப் பதக்கமானது, பீ.என். பீரிஸ், எம்.ஏ. ஷெல்டன், எச். பெரேரா மற்றும் எஸ். உதேஷினி ஆகியோரால் "Falcon" என்பதற்கு வென்றெடுக்கப்பட்டது.

UCSC ஆனது, 2014 நவம்பர் 5 ஆம் திகதி நடாத்தப்பட்ட **e-Swabhimani** 2014 விருது வழங்கும் நிகழ்விலும் **4 விருது**களை (3 வெற்றியாளர்கள் மற்றும் 1 விசேட திறமையாளர்) வென்றெடுத்தனர். ஈ-விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பிரிவு: பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட 'Siyara'

துறைமுக கப்பல் போக்குவரத்து நெரிசல் முகாமை முறைமை; ஈ-ஆட்சி மற்றும் நிறுவனங்கள் பிரிவு: இலங்கை குற்றவியல் பதிவு பிரிவுடன் இணைந்து தீக்ஷன நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 'தன்னியக்க விரல் அடையாளத்தை இனங்காணும் முறைமை (AFIS); ஈ-உள்ளடக்கம் மற்றும் பங்குபற்றல் பிரிவு: கலாநிதி கே.எல். ஜயரத்ன அவர்களது மேற்பார்வையின் கீழ் UCSC இன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப 4 ஆம் ஆண்டு மாணவர்களான எஸ்.சி. குமாரி, டீ.பி. கிரிஎல்ல, கே.சி. ரணசிங்ஹ ஆகியோரால் தயாரிக்கப்பட்ட "Swaraloka" என்பன வெற்றியீட்டின. ஈ-ஆட்சி மற்றும் நிறுவனங்கள் பிரிவு: UCSC இன் மென்பொருள் அபிவிருத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட (காணி) 'உரித்துப் பதிவு முறைமை' விசேட திறமை விருதை வென்றது.

UCSC இல் 2014 பெப்பிரவரி 21 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான புத்தாக்க சம்பியன்சிப் – 2013 போட்டியில் தன்னியக்க வழிப்படுத்தல் சக்கரநாட்காலி உருவாக்கியதற்காக யசித் லொகுகே, பிரசான் மதுமல், தரிந்து குமார மற்றும் என். ரணசிங்ஹ ஆகியோரால் **இரண்டாவது** இடம் வென்றெடுக்கப்பட்டது. வை. லொகுகே அவர்களின் Sipsala எனும் மாணவர் கருத்திட்டத்திற்கு இந்தியாவில் நடைபெற்ற **mBillionth** விருது கிடைத்தது.

UCSC இன் 3 ஆம் ஆண்டைச் சேர்ந்த மனிஷா விஜேசேக்கர எனும் மாணவியின் கருத்திட்டமானது நவம்பர் 20 ஆம் திகதி புது டில்லியில் நடைபெற்ற **டிஜிடல் வலுவூட்டலுக்கான சமூக ஊடக விருது** 2014 மாபெரும் இறுதிப் போட்டியில் my crowd funding பிரிவில் இரண்டாவது இடத்தை வென்றெடுத்தது.

hSenid Mobile நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட டெலிகொம் எப்ளிகேஷன் அபிவிருத்தி Hackathon போட்டியான **TAD Hackathon** யூன் 6-7 ஆம் திகதி வரை நடைபெற்றது. UCSC இன் அணியொன்று, ஸ்பைன் நாட்டின் மெட்ரீட் நகரில் 7 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் பங்குபற்றுவதற்கான தகைமையைப் பெற்றது.

2 ஆம் ஆண்டு இரு மாணவர்களான எம்.எஸ். குமாரகே மற்றும் பீ.ஏ.ஏ. ரன்திக ஆகியோரால் **Google Summer of Code** 2014 வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டது.

எச்.எச்.ஏ.ரீ. அசந்தி (2010/ICT/099) மற்றும் எம்.எஸ். யடிகல (2010/ICT/05) தாய்லாந்தின் பட்டாய நகரில் திசம்பர் 16-17 வரை நடாத்தப்பட்ட மாநாட்டில் பங்குபற்றினர்.

**விளையாட்டுக்கள்**

நவம்பர் 6 - 18 வரை மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான நல்லெண்ண அடிப்படையில் நடாத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் டபிள்யூ.ஏ.ஆர்.ஆர். சோமவீர (2013/IS/055) மற்றும் கே.ஜே.எம்.சி. தரங்க (2013/CS/128) ஆகியோர் பங்குபற்றினர்.

கீழே குறிப்பிடப்படும் UCSC இன் மாணவர்கள் கொழும்பு பல்கலைக்கழக அந்தந்த விளையாட்டு அணிகளுக்கு அணித்தலைவர்களாகவும் உபதலைவர்களாகவும் நியமிக்கப்பட்டதுடன், UCSC இன்

குழுக்கள் 2013 ஆண்டின் வர்ண இரவு நிகழ்வில் பின்வரும் விருதுகளையும் வென்றனர்.

**மெய்வல்லுநர் போட்டி / சுவட்டு மற்றும் கள நிகழ்ச்சி: வர்ணப் பட்டியல் (பெ)** – எஸ்.என்.என். ஹெட்டிஆரச்சி.

**பட்மின்டன்: வர்ணப் பட்டியல் (ஆ)** – ஜீ.கே.ஆர்.பி. கஜநாயக்க, பீ.எம். ரணதுங்க; **வர்ணப் பட்டியல் (பெ)** – * டீ.ஜீ.யூ. அமரசிங்ஹ, * ரீ.டீ.பீ. பீரிஸ்.

**பேஸ் போல்: வர்ணப் பட்டியல் (ஆ)** – ரீ.எஸ். தஹநாயக்க, * ஐ.ஏ விஜேசிங்ஹ.

**கரம்: வர்ணப் பட்டியல் (ஆ)** – எச்.எம்.ஏ.யூ. பண்டார, * ஈ.டீ.எஸ்.சி. கருணபால்; **வர்ணப் பட்டியல் (பெ)** – பி.எஸ். விஜேரத்ன, ரீ.ஏ.கே. லோசனா, * பீ.எம்.கே.ஏ. மதுகொட, *எச்.எச்.ஐ.டீ. ப்லோரன்ஸ்
**சதுரங்க விளையாட்டு: வர்ணப் பட்டியல் (ஆ)** – டபிள்யூ.ஏ.ஆர்.எம். விஜேசூரிய, எம்.டீ.வை. பெரேரா, * டீ.சி. மலிமகே; **வர்ணப் பட்டியல் (பெ)** – சி.ஓ.பீ. வீரதுங்க.

**எல்லே: வர்ணப் பட்டியல் (ஆ)** ஜீ.ஏ. மதுஷங்க

**கால் பந்து: வர்ணப் பட்டியல்** – டபிள்யூ.ஏ.எம்.ஆர்.சி. அபயரத்ன, ஜீ.டபிள்யூ.எஸ்.சி. ஜின்தொட்ட

**ஹோக்கி: வர்ணப் பட்டியல் (ஆ)** – கே.கே.ரீ.பீ. ரணதுங்க, * ஏ.ஏ.ஜே. பகித; **(பெ)** டபிள்யூ.சி.ஈ. விக்கிரமசிங்ஹ, *கே.ஜீ.எச்.யூ. தேசப்பிரிய

**கராத்தே: வர்ணப் பட்டியல் (ஆ)** - *ஐ.ஏ.டீ.கே.சி.டபிள்யூ. குணரத்ன; **(பெ)** - *Ms. எல்.ஜீ.ஏ. திலங்கா; **அணித்தலைவர் (ஆ)** ஐ.ஏ.டீ.கே.சி.டபிள்யூ. குணரத்ன; **(பெ)** - Ms. எல்.ஜீ.ஏ. திலங்கா.

**வீதியோட்டப் போட்டி:** UCSC **சவால் கிண்ண** வீதியோட்டம்.

**பீட கேடய துடுப்பு படகோட்டுதல்: வர்ணப் பட்டியல் (ஆ)** என்.ஏ.என்.எஸ்.எஸ். மிஹிந்துகுலசூரிய (2010/ICT/001)

**றக்பி: வர்ணப் பட்டியல்** – எச்.பீ.ஐ.வீ. பத்திரண, ஐ.எம்.எஸ்.எம். ஹேரத்.

**நீச்சல்: வர்ணப் பட்டியல் (ஆ)** – *ஜீ.பி.எஸ். த சில்வா.

**ரைகொண்டோ: வர்ணப் பட்டியல் (ஆ)** – டபிள்யூ.ஏ.எம்.எஸ். வீரசூரிய, *ஏ.பீ.ரீ. விஸ்வகுல; **அணித்தலைவர் (ஆ)** ஏ.பீ.ரீ. விஸ்வகுல.

**டெனிஸ்: வர்ணப் பட்டியல் (பெ)** - *Ms. ஜீ.ஏ.டீ.எம். கணேபொல, *Ms. பி.எல்.டபிள்யூ. விதாரண.

**கரப்பந்தாட்டம்:** 2013 – **வர்ணப் பட்டியல் (ஆ)** - வை.எம்.கே.கே. யாபாரத்ன, *ஆர்.எம்.கே.எச். ரணசிங்ஹ; **அணித்தலைவர் (ஆ)** – ஆர்.எம்.கே.எச். ரணசிங்ஹ.

## பட்டமளிப்பு


பட்டப்படிப்பு நிகழ்ச்சிகள் நான்கையும் சேர்ந்த 215 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா 2014 யூன், 10ஆம் திகதி நடாத்தப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்கான மாணவர்கள் உயர் தரத்தில் ஏதாவதொரு துறையிலிருந்து தெரிவு செய்யப்பட்டார்கள். இந்த மாணவர்களினது அடைவுகள் துறை ரீதியாக அட்டவணை 3 இல் காட்டப்பட்டுள்ளன.

4ஆம் மற்றும் 3ஆம் வருட பட்டங்களைப் பூர்த்தி செய்து முறையே ஏழு மற்றும் பத்து மாதங்களின் பின்னர் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவின் போது இந்த அமைச்சினால் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு பற்றிய தகவல்கள் இவ் அறிக்கையில் உள்ளடக்குவதற்காக இதுவரை வழங்கப்படவில்லை.

அட்டவணை 3 - UCSC உள்வாரிப் பட்டதாரிகளின் செயலாற்றல்

| அனுமதி | முதலா | மேல் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| BCSc | 2 | 1 | 17 | 83 | 103 |
| BICT | 0 | 0 | 15 | 38 | 53 |
| கணிதம் | 0 | 0 | 8 | 16 | 24 |
| உயிரியல் | 0 | 0 | 3 | 3 | 06 |
| வணிகம் | 0 | 0 | 4 | 14 | 18 |
| கலை | 0 | 0 | 0 | 5 | 05 |
| BSc CS | 10 | 14 | 10 | 5 | 39 |
| BSc ICT | 4 | 12 | 3 | 1 | 20 |
| கணிதம் | 2 | 10 | 2 | 0 | 14 |
| உயிரியல் | 2 | 2 | 1 | 1 | 06 |
| வணிகம் | 0 | 0 | 0 | 0 | 00 |
| கலை | 0 | 0 | 0 | 0 | 00 |
| மொத்தம் | 16 | 27 | 45 | 127 | 215 |

உரு 1, 2013 இல் அமைச்சினால் சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் UCSC பட்டதாரிகளின் தொழில்வாய்ப்புத் திறனானது மருத்துவத்திற்கு நிகராகவும் பொறியியலை விட சிறந்ததாகவும் உள்ளது என்பதைக் காட்டுகின்றது. பட்டமளிப்பு நடைபெற்று இரண்டு மாதங்களின் பின்னர் (உள்வாரி காலப்பகுதியை விடவும் மிகக் குறைந்தது) வெளிவாரிப் பட்டம் பயின்ற 139 பட்டதாரிகளில் 77% ஆனோர் தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன், 13% ஆனோர் மாத்திரமே வேலை தேடுபவர்களாக இருப்பதாகவும் இதுபோன்ற ஆய்வொன்று தெரிவிக்கின்றது.




உரு 1: பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் தொழில்பெறும் இயலுமை

**விருதுகள்**

UCSC இன் மிகச் சிறந்த சாதனையாளர் பட்டதாரிக்கான பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க பதக்கம் Ms. எம்.ஜீ.டீ.கே. பெர்னாந்து என்பவருக்கு வழங்கப்பட்டது. கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சியில் கணினி கற்கைகளுக்கான பேராசிரியர் மொஹான் முனசிங்ஹ விருது, தொழிற்றுறைப் பயிற்சியில் சிறந்த செயலாற்றுக்கான டேவிட் பீரிஸ் குழுமத்தின் தங்கப்பதக்கம் மற்றும் சிறந்த செயலாற்றுக்கான Virtusa கல்விசார் திறன் விருது ஆகிய மூன்று விருதுகளும் முறையே திரு. சி. பங்கஜன் என்பவருக்கும்; (டபிள்யூ.எல். ரணவீர, எம்.ஜே.எம். சஸான், டபிள்யூ.ஏ.ஏ.எம். வீரசிங்ஹ, டபிள்யூ.டீ.என்.வை. குணதிலக்க எனும்) நான்கு மாணவர்கள் இணைந்தும்; ரீ.எம். கமலத் என்பவருக்கும் வழங்கப்பட்டதுடன், இறுதியாண்டு சிறந்த கணினி விஞ்ஞான கருத்திட்டத்திற்கான CINTEC விருது எம்.ஜே.எம். சஸான் என்பவருக்கு வழங்கப்பட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சியில் Ms. எச்.டீ.எஸ்.ரீ. விஜேரத்ன, ஆர்.பீ.எச். விதானகே மற்றும் ரீ.ஜீ.ஈ. பெரேரா ஆகியோருக்கு முறையே, சிறந்த செயலாற்றுக்கான IFS கல்விசார் திறன் விருது, தொழிற்றுறைப் பயிற்சியில் சிறந்த செயலாற்றுக்கான டேவிட் பீரீஸ் குழுமத்தின் தங்கப்பதக்கம் மற்றும் சிறந்த செயலாற்றல் மெட்ரோலா கல்விசார் திறன் விருது ஆகிய மூன்று விருதுகளும் வழங்கப்பட்டன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) நிகழ்ச்சியில் இறுதியாண்டு சிறந்த கருத்திட்டத்திற்கான சம்பத் வங்கி விருது Ms. எச்.டீ.எஸ்.ரீ. விஜேரத்ன மற்றும் திரு. ஜீ.பி.ஐ. த சில்வா ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டன.

எம்மால் உருவாக்கப்படும் மாணவர்களின் தரம் சார்ந்ததாக அது செல்வாக்குச் செலுத்தும் என்பதால் சிறந்த மாணவர்களைக் கவருவதே எமது முதன்மையான அக்கறையாகும். பட்டதாரி

நிகழ்ச்சிகளுக்காக பதிவு செய்யும் மாணவர்களை தெரிவு செய்தலானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) மூலம் மத்தியஸ்தமாக செயற்படுத்தப்படுகிறது. அது மாணவர்களின் விருப்பத் தெரிவின் அடிப்படையிலாகும். தற்போது அதிகமான மாணவர்களின் முதல் தெரிவு இயந்திரவியல் அல்லது மருத்துவம் ஆகும். அத்துடன், அதிகமான மாணவர்கள் UCSC பட்ட நிகழ்ச்சிகள் பற்றியும் கணினித் துறையிலுள்ள தொழில் வாய்ப்புக்கள் பற்றியும் அறியாதவர்களாக உள்ளனர். அதற்காக, UCSC ஆனது இருநாள் செயலமர்வுகளை வருகை தர எதிர்பார்த்து அனுமதி பெறவுள்ள புதுமுக மாணவர்களுக்கு நடத்திய போது மாணவர்களின் வருகை சிறப்பாக இருந்ததுடன், தொடர்ந்தும் ஒழுங்குசெய்து நடாத்தவுள்ளது. இதுவரை உள்வாரி நிகழ்ச்சிக்காக பதிவுசெய்யும் வாய்ப்பு அதற்கான ஆர்வம் காட்டுபவர்களுக்கு கிட்டவில்லை.

**பட்டப்பின்படிப்புகள்**

பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சிகள் முதன்முதலில் 1986 ஆண்டு கொழும்பு வளாகத்தில் பட்டப்பின்படிப்பு திப்ளோமா நிகழ்ச்சியாக வழங்கப்பட்டது. UCSC ஆனது மூன்று (03) முதுமாணிப் பட்டங்களை மீளாய்வாண்டின் போது தொடந்தும் நடாத்தியது. கணினி விஞ்ஞான முதுமாணி பாடநெறியானது கணினி சம்பந்தமான இளமாணிப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமையினைக் கொண்டவர்களை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட பாடநெறியென்பதுடன், தகவல் தொழில்நுட்பம் சம்பந்தமான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியானது பட்டதாரிகள் மற்றும் ஏனைய கற்கைதுறைசார் தொழில்பயிலுநர்கள் ஆகியோர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. MIT நிகழ்ச்சியானது ஈ-லேனிங் மற்றும் பல்லூடக பாடப்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. தகவல் காப்பு விஞ்ஞானத்தில் முதுமாணி நிகழ்ச்சியானது, தகவல் காப்புத் துறையில் பட்டப்பின்படிப்புத் தகைமையைப் பெற விரும்பும் பட்டதாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சியானது, தகவல் தொழில்நுட்பவியல், தகவல் முறைமை கணக்காய்வு மற்றும் தகவல் காப்பு எனும் துறைகளில் வேலை செய்வோருக்கு இடைத் தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது.

UCSC இனால் வழங்கப்படும் முதுமாணி நிகழ்ச்சிகள் இரண்டு வருட பகுதி நேர பாடநெறி என்பதுடன், நான்கு கல்விசார் காலப்பகுதிகளை கொண்டமைந்துள்ளது. 2013/2014 இன் உள்வாங்கலுக்கான பாடநெறிகள் 2014 சனவரியில் ஆரம்பிக்கப்பட்டன. 2014/15 இற்கான மாணவர் அனுமதிகள் சம்பந்தமான தேர்வுப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை என்பன நடாத்தப்படுவதுடன் இவ் வருடத்தினுள் தொடக்கிவைக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையினை 2015 சனவரி மாதமளவில் நிகழ்ச்சிகளுக்கு சேர்த்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிகழ்ச்சிக்கு மொத்தமாக 30 உள்ளகப் பணியாளர்கள் மற்றும் வருகைதரும் விரிவுரையாளர்கள் தமது பங்களிப்பினை வழங்குகின்றனர். முதுமாணிப் பட்டதாரி மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 368 ஆகும். முதுமாணி நிகழ்ச்சிகளால் ஈட்டப்பட்ட வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் UCSC இன் உருவாக்கப்பட்ட நிதிக்கு பங்களிப்பு செய்துள்ளதுடன், அதன் உட்கட்டமைப்பு மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கும் விதமாக மிக முக்கிய பாத்திரத்தினை வகிக்கிறது.

UCSC ஆனது தற்போது மூன்று முதுமாணிப் பட்ட நிகழ்ச்சிகள் மூன்றினை வழங்குவதுடன், ஆய்வுப் பட்ட நிகழ்ச்சிகளுக்காக 368 மாணவர்கள் உள்ளனர். (அட்டணை 4). கணினி விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியானது 1990இல் இருந்து வழங்கப்பட்டு வருவதுடன், அது 149 மாணவர்களைக் கொண்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சியானது 2000இல் இருந்து செயற்படுத்தப்பட்டு வருவதுடன், அது 166 மாணவர்களைக் கொண்டுள்ளது. தகவல் காப்பு நிகழ்ச்சியானது 53 மாணவர்களைக் கொண்டுள்ளது. IBMBB உடன் நடாத்தப்படும் முதலாவது உயிரியல் தகவலியல் நிகழ்ச்சியானது 13 மாணவர்களைக் கொண்டுள்ளதுடன், இது இவ் ஆண்டில் பூர்த்திசெய்யப்பட்டு பெறுபேறுகள் வரவிருக்கின்றன. ஆய்வு மாணவர்கள் 47 பேர் முதுதத்துவமாணி/கலாநிதி (M.Phil/ PhD) பட்டத்திற்கான தமது ஆய்வுச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். அதிகளவு எண்ணிக்கையான ஆய்வு மாணவர்கள் இவ்வாண்டில் பட்டங்களைப் பெற்றுக்கொண்டதன் மூலம் ஆய்வுகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள விசேட தாக்கத்தையும் மற்றும் அதேபோல் கவனத்தையும் மிகச் சிறப்பாக எடுத்துக்காட்டுகிறது.

2013 ஆண்டில் முதுதத்துவமாணி (M.Phil) பட்ட நிகழ்ச்சிக்கு புதிய மாணவர்கள் ஏழு பேர் (பகுதி நேரம் 04 மற்றும் முழு நேரம் 03) பதிவு செய்துகொண்டுள்ள அதேவேளை, இன்னும் ஆறு முழு நேர மாணவர்கள் முதுதத்துவமாணி நிகழ்ச்சியிலிருந்து கலாநிதி நிகழ்ச்சி வரை உயர்வு பெற்றனர்.

அட்டவணை 4 : பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகள்

| பாடநெறி | 2013 இன் அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி விஞ்ஞான முதுமாணி | 81 | 81 | 68 | - | - | 149 | 42 |
| தகவல் தொடர்பாடல் | 100 | 100 | 66 | - | - | 166 | 46 |
| தகவல் காப்பு முதுமாணி | 27 | 27 | 26 | - | - | 53 | 12 |
| கணினி விஞ்ஞானத் தில் பட்டப் பின்படிப்பு திப்ளோமா | - | - | - | - | - | - | 04 |
| தகவல் தொழில்நுட் பத்தில் பட்டப் பின்படிப்பு திப்ளோமா | - | - | - | - | - | - | 02 |
| தகவல் காப்பு சார் பட்டப் பின்படிப்பு திப்ளோமா | - | - | - | - | - | - | 01 |
| **Taught PGD** | **208** | **208** | **160** | - | - | **368** | **107** |
| கலாநிதி | 02 | - | 02 | 03 | 02 | 07 | 01 |
| முதுதத்துவமாணி | 07 | 07 | 10 | 08 | 15 | 40 | 03 |
| **மொத்தம்** | **217** | **215** | **172** | **11** | **17** | **415** | **110** |

எல்லாப் பாடநெறிகளும் ஆங்கில மொழி மூலமே நடைபெறும்.

**விருதுகள்**

பட்டப் பின்படிப்பு பட்டமளிப்பு விழா 2014 செப்ரெம்பர் 23ஆம் திகதி BMICH இல் நடைபெற்றது. கணினி விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சியில் சிறந்த மாணவருக்கான Kingslaka விருது திரு.

எச்.ஆர். யடவத்த என்பவருக்கு வழங்கப்பட்ட அதேவேளை, தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டத்தில் சிறந்த மாணவர் JICA விருது (Ms.) டீ.ஜீ.ஆர். தில்ருக்ஷி என்பவருக்கு வழங்கப்பட்டது. கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஆய்வு விருது (UCSC) - 2013, UCSC இன் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி கே.எல். ஜயரத்ன அவர்களுக்கு வழங்கப்பட்டது.

வெளிவாரிப் பட்டங்களும் விரிவாக்கல் கற்கைநெறிகளும்

வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 6,235 பேர் இணைந்து கொண்டுள்ள அதேவேளை, 389 பேர் விரிவாக்கல் கற்கைநெறிகளைத் தொடருகின்றனர். இதற்குப் புறம்பாக UCTIT மற்றும் UTEL நிகழ்ச்சிகளுக்கு முறையே 10,995 மற்றும் 5,283 பேர் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். FIT நிகழ்ச்சிக்காக 830 மாணவர்கள் பதிவுசெய்துள்ளதுடன், இவ் ஆண்டினுள் 906 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். இவ் ஆண்டினுள் ஈ-கற்றல் நிலையமானது UGC மற்றும் KPMG ஆகியவற்றுக்காக இணையவழி (online) பரீட்சைகளை நடாத்தியது.

தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) பட்ட நிகழ்ச்சி மாத்திரம் அது ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 31,561 பேர்களைக் கவர்ந்துள்ளதுடன், 1,661 பட்டதாரிகளையும், 3,127 உயர் திப்ளோமாதாரிகளையும் 6,518 திப்ளோமாதாரிகளையும் உருவாக்கியுள்ளது. 2013/14 இல் 2,379 புதியவர்கள் இணைந்து கொண்டதுடன், அதிகூடிய பட்டதாரி வெளியாக்கத்தை உருவாக்கியுள்ளது (அட்டவணை 5). 2014/15 வருடத்திற்கான சேர்த்துக்கொள்ளல் செயற்பாடுகளும் இவ் ஆண்டினுள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இவ்வருடம் முடிவடைவதற்குள் 1500 இற்கும் அதிகமான அனுமதிகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 5 : வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள் 2013/14

| பாடநெறி | அனுமதி | 1 ஆம் வருட மாணவ | 2 ஆம் வருட மாணவ | 3 ஆம் வருட மாணவ | மொத்தம் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் திப்ளோமா | 2379 | 3058 | 1154 | 323 | 4535 | 515 |
| தகவல் தொழில்நுட்ப. உயர் திப்ளோமா | 721 | 1154 | 486 | 943 | 2583 | 339 |
| தகவல் தொழில்நுட். இளமாணிப்பட்டம் | 347 | 323 | 620 | 594 | 1537 | 225 |
| முழுவதும் | | **4535** | **2260** | **1860** | **8655** | |

கடந்த மூன்று வருடங்களில் இலக்குகளுடன் பதிவுசெய்து கொண்ட மற்றும் பட்டம் பெற்ற எண்ணிக்கையினை இனங்காட்டும் தகவல் தொழில்நுட்பவியல் பட்டதாரி (BIT) மாணவர்களது செயலாற்றலை அட்டவணை 6 தெரிவிக்கின்றது.

பாடவிடய மாற்றத்தைப் பற்றி விளக்கம் அளிப்பதற்காகவும் நிறுவனப் பின்னூட்டலைப் பெறுக் கொள்வதற்காகவும், ஏப்பிரல் மாதம் 30ஆம் திகதி BIT நிறுவனக் கூட்டம் நடாத்தப்பட்டது. BIT பரீட்சைகள் கொழும்பு, கண்டி, காலி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டது.

அட்டவணை 6: கடந்த மூன்று வருட காலத்தினுள் வெளிவாரிப் பட்ட செயலாற்றல்

| வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சிகள் | KPI | 2011/12 | 2012/13 | 2013/14 |
|---|---|---|---|---|
| DIT – புதிய அனுமதிகள் | **2000** | 2365 | 2034 | 2379 |
| DIT – பதிவு செய்தது | 4000 | 4287 | 4175 | 4535 |
| DIT – திப்ளோமா | **600** | **654** | **611** | **515** |
| HDIT - உயர் திப்ளோமா அனுமதி | **600** | 648 | 714 | 721 |
| HDIT - உயர் திப்ளோமா பதிவுசெய்தது | 2000 | 2019 | 2391 | 2260 |
| HDIT - உயர் திப்ளோமா | **300** | **262** | **305** | **339** |
| BIT – பட்டதாரி அனுமதி | **300** | 279 | 312 | 347 |
| BIT - பட்டதாரி பதிவுசெய்தது | 1500 | 1293 | 1416 | 1860 |
| BIT – பட்டதாரிகள் | **200** | **172** | **194** | **225** |

**பட்டமளிப்பு**

2014 பெப்பிரவரி 10ஆம் திகதி நடாத்தப்பட்ட 2013 ஆம் ஆண்டுக்கான பட்டமளிப்பு விழாவில் பங்குபற்றியவர்களது செயற்சாதனைகள் அட்டவணை 7 இல் காட்டப்பட்டுள்ளன. இப் பட்டமளிப்பு விழாவில் சாதனைமிகு எண்ணிக்கையான 194 பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றனர். மாணவர்களின் கருத்திட்ட பரீட்சைகள் முடிவடைந்து இரண்டு மாதங்களின் பின்னர் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு பற்றிய ஆய்வில் 181 (93%) பேர் பதிலளித்துள்ளனர். 139 (77%) பேர் ஏற்கனவே தொழில் புரிவதுடன், 24 (13%) பேர் சிறந்த தொழிலை தேடிக்கொண்டிருக்கின்றனர். 9 (5%) பேர் அவர்களின் கற்கை நடவடிக்கைகளை தொடந்தவண்ணம் இருக்கும் அதேவேளை, ஏனையோர் தொழிலின்மை தொடர்பாக தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை. கடந்த இரு வருடங்களிலும் தொழில்வாய்ப்பு வீதமானது முறையே 81% மற்றும் 87% ஆகக் காணப்பட்டன. எவ்வாறிருப்பினும், அடுத்த மாணவர் குழுவின் பெறுபேறுகள் வெளியானதைத் தொடர்ந்து சாதனைமிகு எண்ணிக்கையான 225 பேர் BIT பட்டப்படிப்புக்காக தகைமை பெற்றுக்கொண்டனர்.

அட்டவணை 7: 2014 இல் நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்றோர்

| அனுமதி | முதலாவது | உயர் | கீழ் | சித்தி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| BIT | - | 7 | 11 | 176 | **194** |

**விருதுகள்**

தகவல் தொழில்நுட்ப இளமாணி (வெளிவாரி) பட்டத்தில் சிறந்த செயலாற்றலுக்கான பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க பதக்கம் திரு. டபிள்யூ.ரீ.டீ. பெரேரா என்பவருக்கு வழங்கப்பட்டது. சிறந்த தனியாள் கருத்திட்டத்திற்கான விருது Ms. ரீ.டபிள்யூ.ரீ.ரீ. விமலசிறி என்பவருக்கு வழங்கப்பட்டது. திரு. எம்.ஜே.பீ.யூ. சமன்திலக்க நினைவு விருது திரு. கே.எச்.எம். இர்ஷாட் என்பவருக்கு வழங்கப்பட்டது. 4 கல்வித் தவணைகளுக்குமான சிறந்த e-Learner விருதுகள் முறையே திரு. எஸ்.ஏ.சி.எஸ். முத்துகுமாரண, திரு. பி.ஆர்.ஆர். குணசேன, திரு. எச்.எல்.எஸ்.ஈ. சமரசிங்ஹ மற்றும் Ms. பி.எம்.டீ.என். பஸ்நாயக்க ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

**கல்வி நிறுவனங்கள்**

BIT அபேட்சகர்ளுக்கு அதிகமான பயிற்சி நிறுவனங்கள் நேருக்குநேர் வகுப்புக்கள் மற்றும் கற்றல் உதவிகளை வழங்குகின்றன. இச் செயல்முறைகளில் 200 இற்கும் அதிகமான நிறுவனங்கள் பங்குபற்றுவதுடன், சில கல்வியாண்டுகளில் 50 நிறுவனங்கள் வரை பங்குகொள்ளும். UCSC அந் நிறுவனங்களிடம் அதிகாரங்களை கையளிக்காவிடினும் நிகழ்ச்சியின் வெற்றிக்கான அவர்களது பங்களிப்பினை ஏற்றுக்கொண்டுள்ளது. UCSC ஆனது ஒவ்வொரு பாடநெறியினதும் நிறுவனங்கள் ரீதியான பரீட்சைப் பெறுபேற்றின் பொழிப்பினை ஒவ்வொரு வருடமும் பிரசுரிப்பதனால் அபேட்சகர்களுக்கு வழங்குகின்ற நிறுவனங்களை அடையாளம் கண்டுகொள்ளவும் அவர்களின் கற்கும் முறையை திட்டமிட்டுக்கொள்ளவும் இயலுமாகவுள்ளது. அபேட்சகர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் தாமாகவே VLE மற்றும் வழிகாட்டுதல்/பரிந்துரைக்கப்பட்ட உபகரணங்களின் உதவியுடன் கற்றலை மேற்கொள்கின்றனர். 2013/14 இல் 13 மாவட்டங்களிலிருந்து 36 நிறுவனங்கள் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அபேட்சகர்களுக்கு பயிற்சியினை வழங்கியுள்ளது. அவற்றினுள் 12 நிறுவனங்கள் மூன்றாண்டு காலமாக இச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. (அட்டவணை 8 இல் * என அடையாளமிடப்பட்டுள்ளது.)

அட்டவணை 8 : தகவல் தொழில்நுட்ப இளமாணி (BIT) பாடநெறியைக் கற்பிக்கும் நிறுவனங்கள்

| மாவட்டம் | நிறுவனம் |
|---|---|
| அம்பாறை | ) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், கல்முனை |
| மட்டக்களப்பு | ) ஈசொப்ட் கணினி கற்கைகள் |
| கொழும்பு | ) Aurora கம்ப்யூடர் ஸ்டடீஸ், மஹரகம<br>:) * ஈ-அகடமி கம்ப்யூடர் எடிவுகேசன் சென்டர், கொழும்பு 06<br>) * எர்த் இன்டர்நெஷனல், கொழும்பு 08<br>) Easl ஜே லங்கா கணினி பயிற்சி நிறுவனம், கொழும்பு 08<br>) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், கொழும்பு 04<br>) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், நுகேகொடை<br>) * பவுன்டேஷன் ஒப் ஐ ரி புரொபெஷனல்ஸ், பன்னிபிட்டிய<br>) * IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ், கொழும்பு<br>) * மெட்ரிக்ஸ் இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி, கொழும்பு 04<br>* ஒபன்ஆர்க் ஸ்கூல் ஒப் பிசினஸ் & டெக்நொலஜி, கொழும்பு 06<br>1) டெக் ஸ்ரீலங்கா<br>2) * WideAwake சொலுஷன்ஸ், பெபிலியான |
| காலி | ) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |

| | |
|---|---|
| கம்பஹா | ) * எர்த் இன்டர்நெஷனல்<br>) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், கம்பஹா<br>) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், நீர்கொழும்பு<br>) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், கிரிபத்கொட |
| யாழ்ப்பாணம் | ) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>) ஜப்னா கொலேஜ் இன்ஸ்ரியுட் ஒப் டெக்நொலாஜி<br>) * MIS BIT கெம்பஸ்<br>) * Mobile@Net கம்ப்யூடர் சேர்விசஸ் |
| கண்டி | ) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>) மெட்ரிக்ஸ் இன்ஸ்ரியுட் ஒப் ஐ ரி<br>) நெஷனல் இன்ஸ்ரியுட் ஒப் கோபரேடிவ் டெவலப்மன்ட் |
| கேகாலை | ) இன்ஸ்ரியுட் ஒப் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>) Solarize கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| குருணாகல் | ) * ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| மாத்தறை | ) Dbase ஸ்கூல் ஒப் கம்ப்யூடின்<br>) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ்<br>) IDM கம்ப்யூடர் ஸ்டடீஸ் |
| நுவரெலியா | ) iWAVE - கினிகதேன |
| இரத்தினபுரி | ) பவுன்டேஷன் ஒப் ஐ ரி புரொபெஷனல்ஸனசிப்<br>) ஐரிசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ், பலாங்கொடை |
| திருகோணமலை | ) ஈசொப்ட் கம்ப்யூடர் ஸ்டடீஸ் |

UCSC ஆனது, விரிவாக்கல் சான்றிதழ் கற்கைநெறிகள் ஒன்பதை வழங்கிவருவதுடன், சுமார் 400 மாணவர்களை கவர்ந்து கொண்டுள்ளது. ஆயினும், கடந்த சில வருடங்களாக அந்த எண்ணிக்கையில் வீழ்ச்சியைக் காட்டிய போதிலும், 2014 இல் சிறிய அதிகரிப்பை பதிவு செய்தது. UCSC இனால் நடாத்தப்படும் கணினி விஞ்ஞான சான்றிதழ் (CSC) பாடநெறிகள் (நிகழ்ச்சிகள்) பற்றிய விபரம் அட்டவணை 9 இல் தரப்பட்டுள்ளது. (D - காலப்பகுதி நாட்களில்; B - மாணவர் குழுக்கள் எண்ணிக்கை; P - பங்குபற்றுவோர் மொத்த எண்ணிக்கை).

அட்டவணை 9: கணினி கற்கைகள் நிறுவன (CSC) பயிற்சி பாடநெறிகள்

| பாடநெறி | 2013 | D | B | P |
|---|---|---|---|---|
| JavaSE மூலமான Java பிரயோக அபிவிருத்தி | 35 | 8 | 4 | 89 |
| JavaEE மூலமான உயர்தர Java பிரயோக அபிவிருத்தி | 51 | 8 | 3 | 67 |
| Unix/Linux வலையமைப்பு & முறைமை நிர்வாகம் | 78 | 5 | 3 | 71 |

| | | | | |
|---|---|---|---|---|
| உயர்தர பல்லூடக வலைதள வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தி நுட்பம் | 28 | 8 | 2 | 39 |
| AutoCAD 2010 மூலம் கணினி உதவியுடனான வரைதல் | 36 | 8 | 1 | 18 |
| கருத்திட்ட முகாமை மென்பொருள் | - | 2 | 1 | 24 |
| Joomla மூலமான வலைதள வடிவமைத்தல் | - | 2 | 1 | 7 |
| Free and Open மூல மென்பொருள் | - | 2 | 2 | 64 |
| பாதுகாப்பான மொபைல் எப்ளிகேஷன்ஸ் | - | 4 | 1 | 10 |
| ஏனையன | 81 | - | - | - |
| **மொத்தம்** | **309** | **47** | **18** | **389** |

## வெளிநாட்டு மாணவர்கள்

பிராந்தியத்தில் மிகச் சிறந்த மத்திய நிலையமாக ஏற்றுக்கொள்ளவதற்காக வெளிநாட்டு மாணவர்களைக் கவர்ந்து கொள்வது முக்கியமானதாகும். வெளிநாட்டு மாணவர் பிரிவிலே வேறு எங்காவது உயர் தரத்தில் கற்ற மாணவர்களாயினும் உள்ளூருடன் தொடர்புடையவர்களே இதுவரை அனுமதிக்கப்பட்டுள்ளனர். 2011 ஆண்டில் வெளிநாட்டு மாணவர் பிரிவில், கணினி விஞ்ஞான பட்ட நிகழ்ச்சிக்காக முதலாவது மாணவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார். 2013 இல் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சிக்காக முதன்முறையாக வெளிநாட்டு மாணவரொருவர் பூட்டானிலிருந்து சேர்த்துக்கொள்ளப்பட்டார். அதையடுத்து, பாகிஸ்தானில் இருந்து தகவல் காப்பு சார் விஞ்ஞான முதுமாணிப் பட்ட நிகழ்ச்சிக்காக இணைத்துக் கொள்ளப்பட்டவர், முதலாவது கல்வித் தவணையின் பின் பல்கலைக்கழகத்திலிருந்து விலகினார். இவ் வருடம் நைஜீரியாவைச் சேர்ந்த மாணவரொருவர் நிகழ்ச்சியில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். வெளிநாட்டு மாணவர் அனுமதிகள் பற்றிய தகவல்கள் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 10 : வெளிநாட்டு மாணவர்கள்

| பாடநெறி | மொழி | அனுமதி | 1 ஆம் வருட மாணவர் | 2 ஆம் வருட மாணவர் | 3 ஆம் வருட மாணவர் | 4 ஆம் வருட மாணவர் | பட்டம் பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி | ஆங்கில | - | - | - | 01 | - | - |
| MIT | ஆங்கில | 01 | 01 | 01 | - | - | - |

## புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகள்

பாடநெறி மீளமைப்பு மற்றும் பட்ட நிகழ்ச்சிகளில் மாற்றம் காரணமாக BICT நிகழ்ச்சி BIS என மீளப் பெயரிடப்பட்டது. எனினும், இப் பாடநெறியையொத்த பாடநெறியொன்னு இதற்கு முன்னர் செயற்படுத்தப்பட்டதனால், இப் பாடநெறியானது புதிய பாடநெறியாக கருதப்படமுடியாது. ஆனாலும், கணினி விஞ்ஞானம் பற்றிய புதிய விஞ்ஞானமாணி பட்ட மாணவர் குழுவுக்கு 2015 ஆம் ஆண்டில் அவர்களது 3 ஆவது ஆண்டின் போது புதிய மென்பொருள் இயந்திரவியல் பட்டத்தை

தெரிவு செய்வதற்கு வாய்ப்பொன்று வழங்கப்படும். பட்டதாரி பட்டம் வரை செல்லக்கூடிய புதிய சான்றிதழ் நிகழ்ச்சியொன்றை ஆரம்பிப்பதற்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் பற்றிய சர்வதேச திறன் நிகழ்ச்சியை (ICIT) நடாத்துவதற்காகவும் FITIS மற்றும் NODES என்பவற்றுடன் UCSC புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ளது. இந் நிகழ்ச்சித்திட்டத்தை 2015 இல் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 11 : புதிய கற்கைநெறிகள்

| பாடநெறி | மொழி | சான்றிதழ் | திப்ளோமா | பட்டப் பின்படிப்பு திப்ளோமா | முதுமாணி | முதுதத்து வமாணி | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|
| மென்பொருள் பொறியியல் | ஆங்கிலம் | - | 1 | - | - | - | - |
| ICIT | ஆங்கிலம் | 1 | - | - | - | - | - |

## ஆய்வு

### ஆய்வு, புத்தாக்கங்கள் மற்றும் பிரசுரங்கள்

பல ஆய்வுக் குழுக்களின் ஊடாக ஆய்வு மாணவர்கள் மூலமாக ஆய்வானது மேற்கொள்ளப் படுகின்றது (அட்டவணை 13). UCSC ஆனது, பிரதானமாக ஆய்வுக் கருத்திட்டங்களை மையப்படுத்திச் செயற்படுத்தப்படும் அதன் முழு/பகுதி நேர (FT/PT) முதுதத்துவமாணி கற்கைகளுக்காக கணினி விஞ்ஞானம்/பொறியியல் ஆகியனவற்றில் சிறந்த முதனிலைப் பட்டப் பெறுபேறுகளைக் கொண்ட மாணவர்களை சேர்த்துக்கொள்கின்றது. இவ் வருடத்தின் போது முதுதத்துவமாணி நிகழ்ச்சிக்கு புதிய மாணவர்கள் 7 பேர் பதிவு செய்துகொண்டுள்ள அதேவேளை, 7 பேர் முதுதத்துவமாணி பட்டத்திலிருந்து கலாநிதி பட்டம் வரை உயர்வு பெற்றனர். தற்போது UCSC இன் 19 சிரேஷ்ட கல்வியியலாளர்கள் மற்றும் 9 வெளிவாரி ஆய்வாளர்கள் ஆகியோரின் கீழ் 40 மாணவர்கள் 20 பல்துறைக்கற்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். முதுதத்துவமாணி/கலாநிதி பட்ட கற்கைகள் சம்பந்தமாக 18 ஆய்வுக் கருத்திட்டங்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மீளாய்வு ஆண்டின் போது முதுதத்துவமாணி/கலாநிதி மாணவர்கள் 21 பேர் பிரசுரங்களை மேற்கொண்டிருந்தனர்.

சமூக வாழ்க்கை வலையமைப்பு ஆய்வுக் கருத்திட்டத்திற்காக திசம்பர் மாதம் சில நாட்களைச் செலவிடுவதற்கு வெஸ்டர்ன் சிட்சி பல்கலைக்கழகப் பேராசிரியர் கினிகே அவர்கள் UCSC இற்கு வருகைதந்தார். மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் சமன் ஹல்கமகே அவர்களால் “இலங்கையின் பிரசுரிக்கப்பட்ட மற்றும் சுட்டென் ஆய்வு குறிப்புக்களை அதிகரிப்பதற்கான நல்லதொரு வாய்ப்பு” எனும் தலைப்பில் அதிதி சொற்பொழிவொன்றை நிகழ்த்தினார்.

அட்டவணை 12: பணியாளர் ஆய்வுத் துறைகள்

| ஆய்வுத் துறைகள் | FT | PT | மொத்தம் | புதியது | பூர்த்தியானது |
|---|---|---|---|---|---|
| செயற்கை நுண்ணறிவு | 1 | 2 | 3 | 0 | 0 |
| கணினி கிரபிக்ஸ் | 1 | 2 | 3 | 0 | 0 |
| மொழி சொற்கள் சார் தரவு | 2 | 0 | 2 | 1 | 0 |
| டிஜிடல் தடயவியல் | 1 | 0 | 1 | 0 | 0 |
| ஈ –லேனிங் | 2 | 4 | 6 | 0 | 0 |
| விளையாட்டு அடிப்படையில் | 0 | 1 | 1 | 0 | 0 |
| புவியியல் தகவல்முறைமை | 0 | 1 | 1 | 0 | 0 |
| பசுமை தகவல் தொழில்நுட்பம் | 1 | 0 | 1 | 0 | 0 |
| மனித-கணினி பரஸ்பர | 0 | 1 | 1 | 0 | 0 |
| பிரதிபிம்பச் செய்முறை | 0 | 1 | 1 | 0 | 0 |
| தகவல் முறைமை | 3 | 0 | 3 | 1 | 0 |
| நுண்ணறிவு முறைமைகள் | 0 | 1 | 1 | 0 | 0 |
| அறிவுசார் பொறியியல் | 1 | 0 | 1 | 0 | 0 |
| மெஷின் லேனிங் | 1 | 0 | 1 | 0 | 0 |
| மொபைல் -லேனிங் | 1 | 0 | 1 | 0 | 0 |
| பல்லூடகம் | 3 | 0 | 3 | 3 | 0 |
| இயற்கை மொழி செய்முறை | 3 | 0 | 3 | 0 | 0 |
| புலன் வலையமைப்பு | 0 | 1 | 1 | 0 | 0 |
| சமூக விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் | 0 | 3 | 3 | 2 | 0 |
| மென்பொருள் இயந்திரவியல் | 0 | 3 | 3 | 0 | 0 |
| **மொத்தம்** | **20** | **20** | **40** | **07** | **04** |

UCSC ஆனது, ஆய்வினை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தும் செயற்பாட்டு வழிகாட்டியுடன் ஆய்வு நிதியமொன்றினை 2009 இல் உருவாக்கியது. ஆரம்ப பங்களிப்பு 4 மில்லியன்களில் இருந்து முதுமாணி மற்றும் தகவல் தொழில்நுட்ப (BIT) பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளால் உருவாக்கப்பட்ட நிதி மூலமாக தொடர்ந்து வளர்ச்சியடைந்துள்ளதுடன், இது தற்போது 95 மில்லியன்களாக காணப்படுகிறது. சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பணியாளர்கள் ஆய்வுக் கூட்டங்களில் பங்குபற்றுவதற்கும், சர்வதேச மாநாடுகள் மற்றும் சஞ்சிகைகளில் ஆய்வுகளை பிரசுரிப்பதற்கும் ஆண்டுதோறும் முறையே ரூபா 350,000, ரூபா 200,000 வரை பயன்படுத்த முடியும். ஆய்வு முன்னெடுப்புக்களை ஊக்கப்படுத்துவதற்காக 100,000 மேலதிக ஒதுக்கீட்டுத் தொகையொன்றும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது UCSC இன் வருடாந்த பிரசுரங்களை 30 இலிருந்த 60 வரை அதிகரிக்கச்செய்தது. இக்காலப்பகுதியில் 12 நாடுகளில் நடைபெற்ற 56 மாநாடுகளில் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. 24 (60 %) கல்விசார் பணியாளர்கள் ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டனர். அட்டவணை 13 பிரசுரங்களின் விபரங்களை வழங்குகின்றது.

பிரசுரங்களானது பின்வரும் பணியாளர்களால் இணை பதிப்பாசிரியர்களாகக் கொண்ட 86 ஆக்கங்களையும் உள்ளடக்கியிருந்தன: ஜீ.என். விக்கிரமநாயக்க (10), ஏ.ரீ. தர்மரத்ன (8), ஜீ.கே.ஏ. டயஸ் (8), என்.டீ. கொடிக்கார (7), கே.எல். ஜயரத்ன (6), டீ.என். ரணசிங்ஹ (5), வை. ஏக்கநாயக்க (4), ஜே.எஸ். குணதிலக்க (4), கே.பீ. ஹேவகமகே (4), ஏ.ஆர். வீரசிங்ஹ (4), எல்.என்.சி. த சில்வா (3), கே.ரீ.என். த சொய்சா (3), சி.ஐ. கெப்பெட்டியாகம (3), டபிள்யூ.எம்.கே.ஜீ. வீரசிங்ஹ (3), எஸ்.எம்.கே.டீ. அருணதிலக்க (2), எம்.ஜீ.என்.ஏ.எஸ். பெர்னாந்து (2), டீ.டீ. கருணாரத்ன (2), ஜீ.டீ.எஸ்.பீ. விமலரத்ன (2), டீ.ஏ.எஸ். அத்துகோரல (1), எச்.ஏ. கல்தெர (1), ஆர்.எஸ். மதநாயக்க (1), எஸ்.பீ. மாத்தரஆரச்சி (1), எச்.எல். பிரேமரத்ன (1), ஆர்.எம்.பீ.என். சோமரத்ன (1).

அட்டவணை 13: ஆய்வு பற்றிய சுருக்கம்

| விடயம் | பிரசுரிக்கப்பட்டவை | வணிகமயமானவை | சமர்ப்பிக்கப்பட்டவை |
|---|---|---|---|
| ஆய்வுகளின் எண்ணிக்கை | 107 | - | 56 |
| புத்தாக்கங்களின் | - | - | - |
| சஞ்சிகைகளின் எண்ணிக்கை | 11 | - | - |
| புத்தகங்களின் எண்ணிக்கை | - | - | - |
| ஆக்கங்களின் எண்ணிக்கை | 56 | - | - |
| ஏனையவை | - | - | - |
| மொத்தம் | **67** | - | **56** |

### மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

பொருத்தமான ஆய்வுகளை இனங்காணவும் செயற்படுத்தவும் பொறிமுறைகளை வடிவமைப்பது UCSC இன் மற்றுமொரு தந்திரோபாயமாகும். அதற்கேற்ப, இறுதியாண்டு மாணவர்களின் பங்குபற்றலுடன் மார்ச் மாதம் 28 ஆம் திகதி UCSC இன் 6 ஆவது ஆய்வுக் கருத்தரங்கானது வெற்றிகரமாக நடாத்தப்பட்டதுடன், UCSC தனது ICTer பருவகால இதழ்கள் மூன்றையும் வெளியீடு செய்தது. வளர்ந்துவரும் பிராந்தியத்திற்கான தகவல் தொழில்நுட்ப சர்வதேச மாநாடு 2014 திசம்பர் மாதம் 11-12 வரை சிறப்பான முறையில் நடாத்தப்பட்டதுடன், திசம்பர் 10 மற்றும் 13 ஆம் திக்திகளில் நடாத்தப்பட்ட முற்பட்ட மற்றும் பிற்பட்ட மாநாட்டுச் செயலமர்வுகளும் அதில் உள்ளடங்கியிருந்தன. அத்துடன், ஆய்வுக்காக சகல கல்வியாளர்களினதும் ஈடுபாட்டினை தொடர்ந்தும் ஊக்கப்படுத்தும் வகையில் UCSC இன் ஆய்வு நிதியத்தை பயன்படுத்துதல் தொடர்பான பொறிமுறையானது திருத்தியமைக்கப்பட்டது. அத்துடன், நெருக்கடி நிலைமைகளில் பிரதிபளிப்பு மற்றும் முகாமைசெய்தல் தொடர்பான தகவல் முறைமைகள் சார்ந்த 2 ஆவது ஆசியா மாநாடு (ISCRAM) UCSC இல் யூன் மாதம் 20-21 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டதுடன், செப்ரெம்பர் மாதம் 1-26 வரை ISSALE summer பாடசாலை (ISSALE summer school) நிகழ்வும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

UCSC இனால், பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க வருடாந்த சொற்பொழிவு 2014 யூலை மாதம் 23 ஆம் திகதி மிகவும் வெற்றிகரமாக UCSC இல் நடாத்தப்பட்டது. பேராசிரியர் அபய இந்துருவ அவர்கள், “நுண்ணறிவான எதிர்காலம்” எனும் தலைப்பில் சொற்பொழிவை நிகழ்த்தியதுடன் இவர்,

பேராசிரியர் வீ.கே. சமரநாயக்க அறக்கட்டளை நிதியத்தின் கீழ் முதலாவது அறக்கட்டளை தலைவராகவும் நியமனம் பெற்றவராவார். அத்துடன். இவரது முதலாவது சுற்றுப்பயணம் 2014 யூலை மாதம் 24 ஆம் திகதியில் இருந்து ஆகஸ்ட் மாதம் இறுதி வரை ஆறு வாரங்கள் நீடித்த வகையில் அமைந்திருந்தது. மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றுடன் பணியாளர்களின் சமர்ப்பித்தல்கள் பற்றிய விபரம் அட்டவணை 14 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 14 : மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள்

| விடயம் | பங்கு பற்றியது | பிரசுரிக்கப் பட்டது | சமர்ப்பிக்கப் பட்டது |
|---|---|---|---|
| சிரேஷ்ட கல்வியாளர்களின் உள்நாட்டு கருத்தரங்குகள் | 20 | 5 | 1 |
| சிரேஷ்ட கல்வியாளர்களின் சர்வதேசக் கருத்தரங்குகள் | 15 | 31 | 17 |
| ஒழுங்கமைக்கப்பட்ட சர்வதேச செயலமர்வுகள் (ICTer) | 199 | 21 | - |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICTer) சஞ்சிகை | 5 | 3 | - |
| **மொத்தம்** | **239** | **60** | **18** |

## கிடைத்த விருதுகள்

UCSC இனால் தேசிய மற்றும் சர்தேச போட்டிகளில் பங்குபற்றுவதற்காக அதன் மாணவர்களுக்கு தொடர்ந்தும் ஊக்கமளித்தது. வெற்றியினைப் பெற்றுக்கொண்ட மாணவர் விபரம் மாணவர்களின் அடைவுகள் என்பதன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளது. அதேபோல், UCSC இனால் பணியாளர்களின் ஆய்வு உற்பத்திகளை தேசிய மற்றும் சர்தேச மட்டத்தில் போட்டியிட ஊக்கமளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. UCSC பணியாளர்கள், NBQSA ஆய்வு மற்றும் அபிவிருத்திப் பிரிவில் வெண்கலப் பதக்கம் மற்றும் திறமை விருது என்பவற்றை வென்றெடுத்தனர். பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட 'Siyara' துறைமுக கப்பல் போக்குவரத்து நெரிசல் முகாமை முறைமை; ஈ-ஆட்சி மற்றும் நிறுவனங்கள் பிரிவில், இலங்கை குற்றவியல் பதிவு பிரிவுடன் இணைந்து தீக்ஷன நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட 'தன்னியக்க விரல் அடையாளத்தை இனங்காணும் முறைமை (AFIS)' என்பன இவ் வெற்றி பெற்றனவற்றில் உள்ளடங்கியிருந்தன. ஈ-ஆட்சி மற்றும் நிறுவனங்கள் பிரிவில் UCSC இன் மென்பொருள் பிரிவினால் தயாரிக்கப்பட்ட (காணி) 'உரித்துப் பதிவு முறைமை' விசேட திறமை விருதை வென்றெடுத்தது. சந்தருவண் அவர்களால் தொழில்நுட்ப அபிவிருத்தித் துறையில் அடையப்பெற்ற வெற்றிகளுக்கான அங்கீகாரமாக நவம்பர் மாதம் 11 ஆம் திகதி TOYP 2014 – பத்து தலைசிறந்த இளம் நபர்கள் விருதைப் பெற்றுக்கொண்டார். இது தவிர, பணியாளர்களில் சிலர் தமது ஆய்வுகளை மேற்கொள்வதற்காக NSF மற்றும் NRC மானியங்களைப் பெற்றுக்கொண்டனர். கிடைத்த விருதுகள் பற்றிய தகவல்கள் அட்டவணை 15 இல் தரப்பட்டுள்ளன.

http://www.slrail.info எனும் இணைய தளமானது யூன் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது, கலாநிதி கசுன் த சொய்சா அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்ட ஆய்வொன்றின் பெறுபேறாகும். இத் திட்டமானது, தென்பகுதி புகையிரத பாதையில் புகையிரதம் வந்தடையும் நேரம் மற்றும் அதன் வேகம் என்பவற்றின் அடிப்படையில் புகையிரதத்தின் பயணப்

பாதையை பொதுமக்கள் கண்டறிந்துகொள்ள வசதியளிக்கின்றது. Q4 மானியத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக உலக வங்கியின் குழுவொன்று பெப்பிரவரி மாதம் 20 மற்றும் 24 ஆம் திகதிகளில் விஜயம் செய்தது. கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக அவர்கள் பாராட்டியதுடன், திருப்தியடைத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளது எமது கருத்திட்டம் மாத்திரமே எனவும் தெரிவித்தனர். HETC நிதியளிப்பின் கீழ் அமுல்படுத்தப்பட்ட UCSC கருத்திட்டமொன்றினது விபரத்தின் அடிப்படையில் "எனது பிரார்த்தனை நிறைவேறுகிறது: இலங்கைப் பல்கலைக்கழகங்களில் புத்தாக்கம்" எனும் பெயரில் கட்டுரையொன்றை உலக வங்கி பிரசுரித்தது.

அட்டவணை 15 : கிடைத்த விருதுகள்

| விடயம் | விருதுகளின் எண்ணிக்கை | கல்வியாளர்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| உள்நாட்டு விருதுகள் | - | - | - |
| தேசிய விருதுகள் | 16 | 6 | 43 |
| சர்வதேச விருதுகள் | 5 | 2 | 4 |
| ஏனையவை | - | - | - |
| மொத்தம் | **20** | **8** | **47** |

## கல்விசார் ஆளணியினர்

ஓய்வுகால விடுமுறையில் சென்றிருந்த இரண்டு கல்வியாளர்கள் சேவையிலிருந்து விலகினர். இவ்வாண்டினுள் விரிவுரையாளர்கள் (தகுதிகாண்) இருவருக்கும் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவருக்கும் கடந்த வருடம் நடாத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டன. இதில், ஒரு விரிவரையாளர் பின்னர் வேலையை விட்டு விலகினார். விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவர் பட்டப்பின்படிப்புத் தகைமையை அடைந்து கொள்ளத் தவறியதன் காரணமாக வேலையிலிருந்து விலக்கப்பட்டார். எனினும் இத்துறையில் காணப்படும் கவர்ச்சிகரமான ஊதியங்கள் காரணமாக UCSC இனால் வெற்றிடங்கள் நிலவும் சகல பதவிகளையும் நிரப்புவதற்கு இயலாதுள்ளது. கல்விசார் மற்றும் கல்விசார் துணைப் பதவிகள் 82 இல் 40 ஐ மாத்திரமே கொண்டுள்ளது. தனியார் துறையில் மிகச் சிறப்பான எதிர்பார்ப்புக்கள் காணப்படுகின்றமையினால் தொழில்நுட்பப் பயிற்சிபெற்றோரை தக்கவைத்துக்கொள்வதும், சிறந்த இளவயது கல்வியாளரை கவர்ந்திழுப்பதும் மிகக் கடினமான காரியமாகவுள்ளது. நிரந்தர பணியாட்டொகுதியினர் நாளாந்த செயற்பாடுகளை நிறைவேற்றிச் செல்லும் அதேவேளை, தகவல் முறைமை பட்ட நிகழ்ச்சித்திட்டம் போன்ற சில பாடநெறிகளை நடாத்துவதற்காக UCSC ஆனது வெளியிலிருந்து வருகைதரும் ஆளணியின் மீது நம்பிக்கைவைத்து செயலாற்றுகின்றது.

சர்வதேச ரீதியில் மனித வளங்களை கவர்ந்திழுக்கும் வகையில் அவுஸ்திரேலியா, சுவீடன் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளிலிருந்து வருகைதரும் ஆராய்ச்சியாளர்களை குறுங்கால ரீதியில் இவ் வருடத்தினுள் வரவழைத்தது. அண்மையில் உருவாக்கப்பட்ட அறக்கட்டளை நிதியத்தின்

ஊடாக பேராசிரியர் இந்துருவ அவர்கள் வரவழைக்கப்பட்டதை குறிப்பிட்டுச் சொல்லாம். அத்துடன், UCSC தொடர்ந்தும் பணியாளர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தும் வகையில் சுவீடனின் Umea பல்கலைக்கழகத்தின் Linnaeus Palme கருத்திட்டத்தின் கீழ் UCSC இன் பணியாட்டொகுதி அங்கத்தவரொருவர் வெற்றிகரமாக Umea பல்கலைக்கழகத்தில் பாடநெறியினை நடாத்தினார்.

UCSC இன் கல்விசார் பணியாளர்கள் பற்றிய விபரங்கள் அட்டவணை 16 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 16 : பணியாளர் ஆராய்ச்சிப் பகுதிகள்

| விடயம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரையா | விரிவுரையாளர் | உதவி விரிவுரையாளர் | போதனாசிரியர் |
|---|---|---|---|---|---|---|---|
| கணினி | ஆங்கிலம் | - | 03 | 20 | 15* | - | 02 |
| கணினி | ஆங்கிலம் | - | - | - | - | 06 | 18 |

*04 விடுமுறையில் உள்ளனர்

## கல்விசாராத ஆளணியினர்: நிரந்தரம் (P) ஒப்பந்தம் / ஒப்படைப்பு (C/A)

வெளிவாரி மற்றும் நீடிப்பு நிகழ்ச்சிகளுக்கும் பட்டப் பின்படிப்பு நிகழ்ச்சிகளுக்கான கட்டணங்களை இணையவழி (online) மூலம் செலுத்துவதற்கான வசதி தொடர்ந்தும் வழங்கப்படுகிறது. UCSC இன் நிதியியல் முறைமை மேம்படுத்தப்பட்டதுடன், கவனமாக கண்காணிக்கும் மற்றும் bar குறியீடு (barcode) முறை அடிப்படையிலான கண்காணிப்பை உறுதிப்படுத்தும் கருத்திட்டத்தை அமுல்படுத்துதலும் ஆரம்பிக்கப்பட்டது.

UCSCஇன் கல்விசாராத பணியாளர் பற்றிய விபரங்கள் அட்டவணை 17 இல் தரப்பட்டுள்ளன. UCSC இன் கல்விசாராத பணியாளர்கள் 78 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், நிரந்தர நியமனங்கள் 40 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பெரும்பாலான செயற்பாடுகள் ஒப்பந்த மற்றும் ஒப்படைப்பு பணியாளர்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றன. UGC சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்த ஊழியர்கள் 22 பேர் நிரந்தரமாக்குவதற்கான தகைமையைப் பெற்றனர்.

அட்டவணை 17 : கல்விசாராத பணியாளர்கள்

| வகை | மிக சிரேஷ்ட (நிர்வாக) | சிரேஷ்ட பணியாளர் | கனிஷ்ட பணியாளர் | சிற்றூழியர்கள் | கருத்திட்ட பணியாளர் |
|---|---|---|---|---|---|
| நிரந்தரம் - P | 8 | 4 | 22 | 6 | - |
| ஒப்பந்தம் - C | - | 6 | 11 | 8 | 17 |
| ஒப்படைப்பு - A | - | 1 | 10 | 9 | 7 |

**பணியாட்டொகுதி பயிற்சியளித்தல் மற்றும் வெளிநாட்டு விடுமுறை**

பயிற்சி விடுமுறை: கல்விசார் பணியாளர் ஒருவர் வெளிநாட்டில் நடாத்தப்பட்ட பயிற்சியளிப்பு நிகழ்ச்சியில் பங்குபற்றினார். பணியாளர் பெயர் திரு. எஸ்.சி.எம்.பி. அத்தநாயக்க (சிங்கப்பூர்).

கல்விசார் பணியாளர்கள் பன்னிரெண்டு பேர் 13 பயணங்கள் கொண்ட வெளிநாட்டு மாநாடுகளில் பங்குபற்றினர். அவர்களின் பெயர்கள்: திரு. எம்.ஜீ.என்.ஏ.எஸ். பெர்னாந்து (சீனா மற்றும் தாய்லாந்து), பேராசிரியர் என்.டீ. கொடிகார (சிங்கப்பூர்), திரு. கே.கே.கே. தர்மதிலக்க (தாய்லாந்து), Ms. டபிள்யூ.எம்.கே.ஜீ. வீரசிங்ஹ (சிங்கப்பூர்), கலாநிதி எச்.ஏ. கல்தேரா (மலேசியா), கலாநிதி கே.எல். ஜயரத்ன (சிங்கப்பூர்), கலாநிதி (திருமதி) யமயா ஏக்கநாயக்க (ஐக்கிய இராச்சியம்), கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ (கட்டார்), கலாநிதி (திருமதி) எம்.டீ.ஜே.எஸ். குணதிலக்க (நியுஸிலாந்து), திரு. டபிள்யூ.வீ. வெல்கம (இந்தியா), கலாநிதி ரீ.எம்.எச்.ஏ. யூஸுப் (ஹொங்கொங்) மற்றும் கலாநிதி டீ.ஏ.எஸ். அத்துகோரல (சீனா).

இரண்டு கல்வியாளர்கள் பிரதான பேச்சாளர்களாக அழைக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள்: கலாநிதி ஏ.ஆர். வீரசிங்ஹ (இம்பால், இந்தியா) மற்றும் கலாநிதி எம்.டீ.என்.ஆர். தயாரத்ன (புது டில்லி, இந்தியா).

கலாநிதி (திருமதி) எம்.டீ.ஜே.எஸ். குணதிலக்க அவர்கள் பணியாளர் பரிமாறல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுவீடன் நாட்டின் Umea பல்கலைக்கழகத்திற்கு 6 வார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். கலாநிதி எம்.டீ.என்.ஆர். தயாரத்ன அவர்கள் கூட்டு முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக சுவீடன் நாட்டின் ஸ்டொக்ஹோம் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்தார். பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க அவர்கள் தாய்வானில் நடைபெற்ற IOI போட்டியில் பங்குபற்றிய இலங்கை தேசிய குழுவின் தலைவராக கலந்துகொண்டார். அத்துடன், அவர் APICTA 2014 நிகழ்வின் நடுவராக இந்தோநேசியவின் ஜகர்த்தா நகருக்கு விஜயம் செய்தார். கலாநிதி கே.எல். ஜயரத்ன அவர்கள் மன்தன் விருதைப் பெறுவதற்காக இந்தியாவுக்கு விஜயம் செய்தார்.

சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் 1, கலாநிதி (திருமதி) ஏ.ரீ. தர்மரத்ன அவர்கள் ஓய்வுகால விடுமுறையில் சனவரி மாதம் மலேசியாவிலுள்ள Monash பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். பின்பு திசம்பர் மாதம் அவர் வேலையை இராஜினாமா செய்தார். ஓய்வுகால விடுமுறையில் சென்றிருந்த இருவர் இந்த ஆண்டில் நாடு திரும்பியதுடன், அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற கலாநிதி எம்.சி. ஜயவர்தன அவர்களும் வேலையை இராஜினாமா செய்தார்.

10-09-2014 முதல் 01-11-2015 வரை கற்கை விடுமுறையில் சென்றிருக்கும் திரு. வீ.பி. விஜேசூரிய அவர்கள், ஐக்கிய இராச்சியத்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் கணினி விஞ்ஞானத்தில் விஞ்ஞான முதுமாணி கற்கையை தொடருகின்றார். திரு. எச்.எம். சிறிவர்தன (ஜப்பான்), Ms. எல்.என்.சி. த சில்வா (இலங்கை), திரு. எம்.ஐ.ஈ. விக்கிரமசிங்ஹ (மலேசியா) எனும் ஏனைய மூன்று பேர் தொடர்ந்தும் கற்கை விடுமுறையில் உள்ளனர். Ms. எப்.எச்.ஏ.எம். பிரேமசந்திர

(அவுஸ்திரேலியா) அவரது கலாநிதி (PhD.) பட்டத்தை வெற்றிகரமாக பூர்த்திசெய்துவிட்டு நாடு திரும்பினார்.

பணியாளர் உறுப்பினர்கள் நான்கு பேர் தனிப்பட்ட ரீதியில் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டனர். அவர்கள், திரு. ஏ.எம்.டீ.எச். அத்தநாயக்கே (தாய்லாந்து), திரு. கே.எஸ். குணதிலக்க (தாய்லாந்து மற்றும் மியான்மார்), கலாநிதி கே.எல். ஜயரத்ன (அவுஸ்திரேலியா மற்றும் இந்தியா), திரு. எச்.கே.ரீ.சி. ஹல்லொலுவ (தாய்லாந்து) ஆகியோர். கணக்குப் பதியுநர் - திரு. ஜீ.எம். சிறிசேன, இரு வருட ஊதியமற்ற விடுமுறையில் தொழிலுக்காக கட்டார் நாட்டுக்குச் சென்றுள்ளார்.

**பணியாட்டொகுதியினர் நலன்கள்**

**காப்புறுதித் திட்டம்**

UCSC இனது ஊழியர்களின் நன்மை கருதி யூனியன் அசூரன்ஸ் கம்பனியுடன் இணைந்து காப்புறுதித் திட்டமொன்று 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், ஆண்டின் நடுப்பகுதி வரை ஊழியர்கள் சுமார் 51 பேர் இக் காப்புறுதித் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்துள்ளனர். செலுத்தப்பட்ட தவணைக்கட்டமானது இழப்பீட்டு கோரிக்கைகளை விடவும் குறைவாக இருந்ததனால், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ நிலையத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட இழப்பீட்டுக் கோரிக்கை முறையொன்றின் மூலம் இத் திட்டமானது மாற்றீடு செய்யப்பட்டது.

**வருடாந்த விநோத சுற்றுலா**

UCSC இன் பணியாட்கள் அக்டோபர் மாதம் 10-12 ஆம் திகதி வரை திருகோணமலைக்கு நலன்புரி சுற்றுலாவை மேற்கொண்டனர். இது தவிர, நலன்புரிச் சங்கத்தினாலும் திசம்பர் மாதம் 21 ஆம் திகதி அம்பளத்தில் ஓர் நாள் ஒன்றுகூடலை ஒழுங்குசெய்யப்பட்டது. நலன்புரி சங்கமானது, 2015 சனவரி 1 ஆம் திகதி முதல் பணியாட்களின் பயன்பாட்டுக்காக குளிரூட்டி, மைக்ரோவேவ், உடற்பயிற்சி உபகரணங்கள் போன்ற வசதிகளை அறிமுகப்படுத்தியது. UCSC மூலம் அதன் உருவாக்கப்பட்ட நிதியிலிருந்து சுமார் ரூ. 5 மில்லியனுக்கு அண்மித்ததொரு தொகையைப் பயன்படுத்தி நலன்புரிச் சங்கத்தின் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்தது.

UCSC இன் நலன்புரி சங்க கூட்டம் பெப்பிரவரி மாதம் 17 ஆம் திகதி நடாத்தப்பட்டதுடன், புள்ளிவிபரவியல் திணைக்களமானது சங்கத்தின் நிதி திரட்டுதல் செயற்பாடுகளுக்கு பங்களிப்புச் செய்யாததன் காரணமாக அத் திணைக்களத்தை சங்கத்தின் சட்ட யாப்புக்களில் இருந்து நீக்குவதற்கான வாக்கெடுப்பு 21 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

## மீண்டெழும் செலவுகள்

திறைசேரி நிதி பட்டதாரி நிகழ்ச்சி செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு போதாமையினால், UCSC ஆனது உழைத்த வருமானத்தையும் அன்றாட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தியது. ஒரு பட்டதாரி மாணவனுக்கான செலவு ரூ. 190,000 ஆகும். UCSC அதன் பட்டதாரி மாணவ மீண்டெழும் செலவினத்தில் 42% ஆன 67 மில்லியன்களை உள்வாரிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிக்காக பங்களிப்புச் செய்தது. ஆளுக்குரிய வேதனாதிகளின் அதிகரிப்பினைத் தவிர்த்து அரசாங்கத்தின் ஒதுக்கீடுகள் கடந்த ஆண்டையும் விட குறைவடைந்து காணப்பட்டது. மீண்டெழும் செலவுகளின் விபரங்கள் அட்டவணை 18 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 18 : மீண்டெழும் செலவு — ரூபா 000'

| விடயம் | 2013 | 2014 |
|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 92,840 | 124,691 |
| பிரயாணச் செலவுகள் | 528 | 645 |
| வழங்கல்கள் | 4,579 | 8,969 |
| பராமரிப்புகள் | 3,057 | 5,303 |
| ஒப்பந்த சேவைகள் | 29,701 | 37,614 |
| ஏனையன | 57,357 | 108,306 |
| மொத்தம் | **188,062** | **285,528** |
| அரசாங்க ஒதுக்கீடு | 91,802 | 93,716 |

## மூலதனச் செலவுகள்

UCSC அதன் கணினி வசதிகளை மேம்படுத்துவதற்காக பௌதிக வளங்களில் முதலீடு செய்துள்ளது. ஈட்டப்பட்ட நிதியின் மூலம் கணினி ஆய்வுகூடங்கள் சில நவீன உபகரணங்கள் கொண்டவையாக அதன் பிரதான உபகரணங்கள் மாற்றீடு செய்யப்பட்டன. UCSC இனால் தமது சொத்துக்கள் பற்றிய விபரங்களை பேணிச்செல்வதற்காக bar குறியீடு (barcode) முறையொன்று ஸ்தாபிக்கப்பட்டது. வலையமைப்பு தொழிற்பாட்டு நிலைய உபகரணங்களின் பாகங்களானது பொருத்தமான உயர் தரமுடையதாக மேம்படுத்தப்பட்டது. மூலதனச் செலவுகளின் விபரங்கள் அட்டவணை 19 இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 19 : மூலதனச் செலவு — ரூபா 000'

| விடயம் | 2013 | 2014 |
|---|---|---|
| தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் | 14,604 | 37,328 |
| இயந்திரங்களை கைகொள்ளல் | - | - |
| கட்டடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்களை | 22,327 | 71,702 |
| ஏனையன | 4,076 | 6,506 |

| | | |
|---|---|---|
| மொத்தம் | **41,007** | **115,536** |
| அரசாங்க ஒதுக்கீடு | 19,150 | 15,000 |

## கருத்திட்டங்கள் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

UCSC ஆனது பல துறைகளிலும் பலம் வாய்ந்த ஆய்வுக் குழுவொன்றை கொண்டுள்ளது. அவற்றில் வடிமைத்தலும் மாதிரியும் (FASS-2, SLN), ஈ-லேனிங் (NSF) நிலைபேறான கணினியில் (K-Sim, ASSERT, Tikiri DB), உணவு பாதுகாப்பு (NTRP) மற்றும் மொழித் தொழில்நுட்பவியல் (LTRL) என்பன பாவணையாளர் சமூகத்தை அடைந்தவையாகும். UCSC ஆனது சக்திவாய்ந்த தொழிற்றுறை - பல்கலைக்கழக ஒத்துழைப்பினைக் கொண்டுள்ள அதேவேளை, ஒன்றிணைந்து இயங்கும் பல்துறை ஆய்வுக் கலாசாரத்தையும் கட்டியெழுப்பியுள்ளது.

ஆய்வு அடிப்படையிலான கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக UCSC ஆனது பொது மற்றும் தனியார் துறையினருக்கு ஆலோசனை சேவைகளையும் நடாத்துகின்றது. UCSC ஆனது கடந்தகால அதன் சில செயற்பாடுகள் மூலம் பிரசித்திபெற்றுள்ளது. 1981 ஆண்டிலிருந்து தேசிய ரீதியிலான தேர்தல்களில் UCSC ஆனது உதவி வழங்கிவருகின்றது. UCSC இன் மென்பொருள் மூலம் தற்போது பிறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்கள் கருமபீடத்தின் மூலமாக அதேயிடத்தில் வழங்கப்படுகிறது. UCSC இன் முயற்சியின் ஊடாக சிங்கள யுனிகோட் (Unicode) வடிவமைப்பு மற்றும் அபிவிருத்தியின் பெறுபேறாக நவீன கணினிகளில் சிங்கள மொழிப் பயன்பாட்டுக்கு உதவுகின்றது.

பல்வேறு நிறுவனங்கள் சார்பாக ஈ-சோதனையினை அடிப்படையாகக் கொண்ட பல ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் ஈ-கற்றல் நிலையத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. நீதிமன்ற வழக்குகளில் உதவுவதற்காக டிஜிடல் தடயவியல் (Digital Forensic) செயற்பாடுகளை UCSC ஆனது தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது. நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஐரோப்பாவின் டிஜிடல் தடயவியல் மற்றும் கவுன்சில் அமைப்பின் குழுவொன்று டிஜிடல் தடயவியல் நிலையத்தின் செயற்பாடுகளை ஆராய்வதற்காக விஜயம் செய்தது.

ஆர்வம் காட்டுகின்ற பிரதான பங்குதாரர்களுடன் உபாயவழி தொடர்புகளை பேணுகின்ற அதேவேளை, நாட்டில் ஈ-அரசாங்க கருத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் HETC என்பவற்றுடன் புதிய கருத்திட்டங்களை ஆரம்பித்தல் என்பன தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. தீக்ஷ்ன என்பது, கம்பனி, பூச்சிய மீதியுடன் ஆரம்பிக்கப்பட்டது தற்போது சுமார் ரூ. 9 மில்லியன்களை ஒதுக்கமாகக் கொண்டுள்ள UCSC இற்குச் சொந்தமான கம்பனியாகும். UCSC இனால் நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் மற்றும் அவற்றுக்கான செலவு விபரங்கள் அட்டவணைகள் 20 மற்றும் 21 இல் தரப்பட்டுள்ளன.

பட்டப்பின்படிப்பு மட்டத்தில் கூட்டு பட்டதாரி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பான செயற்பாடுகளை எடுப்பதற்காக திசம்பர் மாதம் 15 ஆம் திகதி குவின்ஸ்லாந்து தொழில்நுட்பப்

பல்கலைக்கழகத்தின் குழுவுடன் சந்திப்பொன்று நடாத்தப்பட்டது.

***தீக்ஷ்ன***

தீக்ஷ்ன நிறுவனத்துக்கான உள்நாட்டு சமூகங்களின் ஆர்வத்தை பெற்றுக்கொள்ள முடியுமானதுடன், 2013/14 நிதியாண்டுக்காக இலாபத்தை ஈட்டிக்கொள்ளவும் முடிந்தது. இலங்கை பொலிஸ் துறைக்காக மெருகூட்டப்பட்டு உருவாக்கிய தன்னியக்க விரல் அடையாளத்தை இனங்காணும் முறைமை (AFIS) தொடர்பாக தீக்ஷ்ன நிறுவனம் பற்றிய கவன ஈர்ப்பு மற்றும் விளம்பரம் என்பன கிடைத்தது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் இம் முறையானது பெப்பிரவரி மாதம் 27 ஆம் திகதி தேசத்திற்கு மகுடம் (Deyata Kirula) கண்காட்சியின் போது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இம் முறைமையின் வெற்றி காரணமாக, இன்டர்போல் AFIS நிபுணர்களின் தொழிற்பாட்டு குழு நவம்பர் மாதம் 18 -19 ஆம் திகதிகளில் கொழும்பில் கூடியதுடன், அதில் UCSC இனால் அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் தீர்வு திட்டம் தொடர்பில் அவர்களின் பாராட்டுதலை தெரிவித்தனர்.

தீக்ஷ்ன சேவையின் மூலமாக உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) பல்கலைக்கழக மாணவர் தெரிவு செய்யும் முறைமை UGC இனால் 2012/13 கல்வியாண்டு முதல் மிகவும் வெற்றிகரமாக பயன்படுத்தப்படுகின்றது. இதுதவிர, பிறப்பு, விவாக மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கும் முறைமையும் வெற்றிகரமாக அமுலாக்கப்பட்டு வருவதுடன், அம் முறையானது 2013/14 ஆண்டிலிருந்து நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. உயர் கல்வியை ஆதரமாகக் கொண்ட ஆய்வு கடந்த வருடங்களைப் போலவே இவ் வருடத்திலும் கொழும்புப் பல்கலைக்கழக புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து மிக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது. வழக்கறிஞர்கள் இணையவழி (on-line) மூலமாக அடிப்படை உரிமை சம்பந்தமான வழக்குகளை தாக்கல் செய்வதற்கான வசதியளிக்கும் இலங்கை உயர் நீதிமன்றத்துக்கான e-filling முறை 2014 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மற்றுமொரு பிரதான கருத்திட்டமாகும். இக் கருத்திட்டமானது பூர்த்தி செய்யப்பட்டு, அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கிவைக்கப்பட்டது. அத்துடன், BIT இனது முகாமைத்துவ தகவல் முறைமையை பராமரிப்புச் செய்வதற்கும், அதேபோல் கொழும்பு பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தின் (UCSC) பட்டப்பின் படிப்பு மாணவர் அனுமதிகள் தொடர்பான இணையவழி (on-line) விண்ணப்பித்தல் முறையை விருத்தி செய்வதற்கும் தீக்ஷ்ன தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றது. மேலும், UCSC இனது மென்பொருள் அபிவிருத்திப் பிரிவின் பல கருத்திட்டங்களை உரிய காலப்பகுதியில் பூர்த்திசெய்துகொள்வதற்காக தீக்ஷ்ன பணியாளர்கள் இலவசமாக உதவி வருகின்றனர். தீக்ஷ்ன கம்பனியை ஒழுங்கான முறையில் அமைப்பது தொடர்பாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் அவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. கவுன்சில் பத்திரமொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. தீக்ஷ்ன நிறுவன தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக UCSC இன் பணியாளர் சபை மற்றும் பணியாட்களை அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதுடன், 2013 ஆம் ஆண்டின் UCSC இனது வருடாந்த அறிக்கைக்கு நிறுவனம் பற்றிய

மீளாய்வொன்றை உள்ளடக்குவதற்கும், அதேபோல அது தொடர்பான தகவல்களை UCSC இன் கணக்காய்வாளர்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டன. UCSC இனது பணியாளர் அங்கத்தவர்கள் 62 பேர் தீக்ஷ்ன சேவையில் அங்கத்துவம் பெற்றுக்கொண்டதன் மூலமாகவும், அதனது செயற்பாடுகள் சம்பந்தமாக ஆர்வம் காட்டுவதன் மூலமாகவும் தீக்ஷ்ன நிறுவனத்தின் முக்கியத்துவம் இவ் வருடத்தினுள் மேலும் வளர்ச்சி அடைந்தது. தீக்ஷ்ன நிறுவன அங்கத்தவர்கள் பல்வேறு கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பணியாற்றுவதுடன், இதில் அதிகளவு எண்ணிக்கையானோர் பங்குகொள்வதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஒவ்வொரு கூட்டங்களிலும் பணிப்பாளர்களது 70% இற்கும் அதிகமானோரின் பங்குபற்றலின் ஊடாக அவர்களது ஊக்கமானது வெளிப்படுத்தப்பட்டது. தீக்ஷ்ன நிறுவனமானது அதன் ஆரம்பக் குறிக்கோளான அதனது ஒதுக்கத்தை 10 மில்லியனை விட உயர்ந்த தொகைக்கு கொண்டு செல்வதையும் 9 மில்லியனை முதலீடு செய்வதையும் அடைந்து கொண்டது. தீக்ஷ்ன அதனது 2013 ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் சனவரி மாதம் 31 ஆம் திகதியும் 2014 ஆண்டுக்கான வருடாந்த பொதுக் கூட்டம் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதியும் நடாத்தப்பட்டன.

**கண்காட்சிகள்**

பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சில மாணவ கருத்திட்டங்களை மேம்படுத்துவதற்காக அக்டோபர் 24 முதல் 27 வரை நடைபெற்ற இன்பொடெல் (Infotel) கண்காட்சியில் UCSC பங்குபற்றியது.

## கருத்திட்ட செலவினம் (உள்நாட்டு/வெளிநாட்டு நிதியிடப்பட்டவை)

அட்டவணை 20 : மீண்டெழும் செலவுகள் ரூ. 000'

| பெயரும் விபரமும் | மானியம் | நிதியிடும் நிறுவனம் | TCE | RFA | DF |
|---|---|---|---|---|---|
| Tikiri DB | 1,558 | சுவிடன் கணினி விஞ்ஞான நிறுவகம் | | | |
| Summer பாடசாலை கருத்திட்டம் | 2,777 | ஸ்டொக்ஹோம் பல்கலைக்கழகம் | | | |
| ASSERT | 2,087 | Uppsala பல்கலைக்கழகம் | | | |
| **வெளிநாட்டு நிதி** | **6,422** | | | | |
| கள பீரங்கி பாவிப்பு முறைமை | 2,428 | பாதுகாப்பு அமைச்சு, இலங்கை | | | |
| முப்பரிமாண கரையோரம் சார் கூடுதல் கண்காணிப்பு முறைமை | 2,655 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| பயிர் உற்பத்தி கண்காணிப்பு மற்றும் முகாமை | 6,008 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| மாறுபட்ட கற்றல் சமூகங்கள் இடையேயான mLearing | 1,020 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முக ID-இலங்கையினது 3D கிரபிக்ஸ் மூலமாக கணினியை அடிப்படையாக கொண்ட தடயவியல் முக மறுசீராக்கம் | 1,569 | தேசிய விஞ்ஞான மன்றம் | | | |
| விமான பயிற்சியளிப்பு மாதிரி இயந்திர கருத்திட்டம் | 1,008 | பாதுகாப்பு அமைச்சு, இலங்கை | | | |
| தன்னியக்கமான உள்ளடக்கத்தை ஆதாரமாக கொண்ட தானியங்கி கண்காணிப்பு முறைமை | 800 | உயர் கல்விக்கான தேசிய நிலையம் | | | |
| **உள்நாட்டு நிதி** | **20,226** | | | | |

TCE – மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு; RFA – விண்ணப்பங்களுக்கான கோரிக்கை; DF – கழிவு விடயம்

அட்டவணை 21 : கருத்திட்ட செலவுகள் ரூ. 000'

| பெயர் | TCE மீ/வ திரட்டிய கிரயம் | 2013 ஆண்டில் செலவு | 2014 ஆண்டில் செலவு | 31.12.2014 இல் உள்ளபடி மொத்த செலவு | பௌதீக முன்னேற்ற % |
|---|---|---|---|---|---|
| Tikiri DB | | 120 | 465 | 585 | 99% |
| Summer பாடசாலை கருத்திட்டம் | | | 2345 | 2345 | 100% |
| ASSERT | | | 656 | 656 | 25% |
| **வெளிநாட்டு நிதி** | | **120** | **3,466** | **3,586** | |
| கள பீரங்கி பாவிப்பு முறைமை | 1010 | 458 | 515 | 1983 | 95% |
| முப்பரிமாண கரையோரம் சார் கூடுதல் கண்காணிப்பு முறைமை | 1709 | 607 | 273 | 2589 | 100% |
| பயிர் உற்பத்தி கண்காணிப்பு மற்றும் முகாமை | | 1666 | 1786 | 3452 | 50% |
| மாறுபட்ட கற்றல் சமூகங்கள் இடையேயான mLearing | | | 309 | 309 | 100% |
| முக ID-இலங்கையினது 3D கிரபிக்ஸ் மூலமாக கணினியை அடிப்படையாகக் கொண்ட தடயவியல் முக மறுசீராக்கம் | | | 426 | 426 | 50% |
| விமான பயிற்சியளிப்பு மாதிரி இயந்திர கருத்திட்டம் | | | 836 | 836 | 90% |
| தன்னியக்கமான உள்ளடக்கத்தை ஆதாரமாக கொண்ட தானியங்கி கண்காணிப்பு முறைமை | | | 335 | 335 | 100% |
| **உள்நாட்டு நிதி** | **2,719** | **4,515** | **6,220** | **13,454** | |

## நிதிச் செயலாற்றல் (செலவினம்)

அட்டவணை 22: நிதிச் செயலாற்றல் (செலவினம்) ரூபா 000'

| விடயம் | ஒதுக்கீடு | செலவு | சேமிப்பு/மிகை |
|---|---|---|---|
| கருத்திட்டமல்லாத மீண்டெழுதல் | 269,025 | 285,528 | (16,503) |
| கருத்திட்டமல்லாத மூலதனம் | 199,450 | 132,206 | 67,244 |
| கருத்திட்டம் - உள்நாட்டு நிதியிடல் | 13,454 | 13,454 | 0 |
| கருத்திட்டம் -வெளிநாட்டு நிதியிடல் | 8,920 | 8,920 | 0 |
| மொத்தம் | **490,8490** | **440,108** | **50,741** |

## நிதிச் செயலாற்றல் (உருவாக்கப்பட்ட வருமானம்)

அட்டவணை 23: நிதிச் செயலாற்றல் (உருவாக்கப்பட்ட வருமானம்) ரூபா 000'

| வருமான மூலம் | ஒதுக்கீடு | திரட்டுதல் | பற்றாக்குறை /மிகை |
|---|---|---|---|
| பட்டதாரிக் கற்கைகள் | 2,775 | 4,366 | 1,591 |
| பட்டப் பின்படிப்பு கற்கைகள் | 63,103 | 66,469 | (3,366) |
| ஆலோசனைகள் | 11,500 | 18,589 | 7,089 |
| வெளிவாரிப் பட்டம் | 88,915 | 72,620 | (16,295) |
| ஏனையவை | 53,254 | 75,426 | 22,172 |
| மொத்தம் | **272,801** | **237,470** | **11,191** |

பட்டதாரி வருமானம் நீங்கலாக UCSC ஆனது ரூ. 2728015 ஐ உருவாக்கப்பட்ட வருமானமாக ஈட்டியது. UCSCஇன் உருவாக்கப்பட்ட வருமானமானது பல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களை விடவும் உயர்வானதாக இருந்தது.

## நிதிச் செயலாற்றல் பகுப்பாய்வு

அட்டவணை 24: நிதிச் செயலாற்றல் பகுப்பாய்வு ரூபா 000'

| விடயம் | வாய்ப்பாடு | ஒரு மாணவருக்கான செலவு |
|---|---|---|
| ஒரு மாணவருக்கான மீண்டெழும் செலவினம் (RE) | RE / மாணவர் எண்ணிக்கை பலம் | 189 |
| ஒரு மாணவருக்கான மூலதனச் செலவினம் (CE) | CE / மாணவர் எண்ணிக்கை பலம் | 156 |
| மொத்தம் | | **345** |

## உட்கட்டமைப்பு வசதிகள் – 2014 இல் பெற்றுக்கொண்டவை

மட்டுப்படுத்தப்பட்ட இடத்தினுள்ளே செயலாற்றும் UCSC நிறுவகத்திற்கு விரிவுரை நடத்துவதற்கு கூட போதுமான இடவசதிகளில்லை. மாணவர்களுக்கு சிற்றுண்டிச்சாலை, பொது மற்றும் கற்பிக்கும் அறைகளில் போதிய இடவசதியில்லை. பல்கலைக்கழகத்தினால் காணியை வழங்க முடியாதுள்ளதால், UCSC ஆனது பட்டதாரி அபேட்சகர்ளுக்கான வகுப்பறைகள் மற்றும் முழு நேர ஆய்வு மாணவர்களுக்குரிய வசதிகள் தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக அதனது கட்டடத்தின் மேற்குப் பகுதி மற்றும் நான்காவது மாடி நீடிப்பு நிர்மாண வேலைகளை ஆரம்பித்ததுடன், இப் பணிகள் 2013 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்யப்பட்டன.

குறுங்கால உட்கட்டமைப்பு வசதிகளின் தேவைகளுக்கு முகங்கொடுப்பதுடன், விரிவாக்கல் திட்டமானது மத்திய மற்றும் நீண்ட கால இலக்குகளுக்கு முகங்கொடுக்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சிற்றுண்டிச்சாலை அமைவிடத்தில் சிற்றுண்டிச்சாலை மற்றும் நிருவாகக் கட்டடமொன்றையும் நிர்மாணிப்பதற்கு இனங்காணப்பட்டுள்ளதுடன், விரிவுரை மண்டபங்கள்/கற்கும் அறைகளுடன் இணைந்த கேட்போர்கூடமொன்றின் மூலம் தற்போதுள்ள கேட்போர்கூடத்தை மீளமைப்பது மத்தியகால இலக்குகளாகும். கொழும்புப் பல்கலைக்கழகத்திற்குப் புறம்பாக கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான தேவை நீண்டகால இலக்காக அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் பிரதிபளிப்பாக, பத்திரிகை விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டதுடன், பொருத்தமான பல இடங்கள் இனங்காணவும் பட்டன. எனினும், உயர் கல்வி அமைச்சினால் முன்மொழிவுகள் எதுவும் அங்கீகரிக்கப்படாததன் காரணமாக காணியொன்றை கொள்வனவு செய்யும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. நிர்மாண வேலைகள் பற்றிய விபரங்கள் அட்டவணை 25 இல் தரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது, UCSC மூலம் 2015 ஆம் ஆண்டு முதல் 350 மாணவர்களை உள்வாங்கும் நிபந்தனைக்கு ஏற்ப, சிற்றுண்டிச்சாலை மற்றும் நிருவாக கட்டடத்தின் II ஆவது கட்டத்திற்கான ஆரம்ப இணக்கத்தை தெரிவித்தது. எனினும், தற்போது காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட இடவசதி தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதன் பின்பு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் UCSC இன் சிற்றுண்டிச்சாலை மற்றும் நிருவாக கட்டடத்தின் II ஆவது கட்டத்தை நிர்மாணிப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கியது. கிழக்குப் பகுதியின் மேல் பரப்பு கூரைப் பகுதி செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டது. அத்துடன், UCSC இனது சிற்றுண்டிச்சாலையின் I ஆவது கட்டம் மற்றும் மேல் பரப்பு கூரைப் பகுதி ஆகியன உபவேந்தர் மற்றும் ஏனைய அதிதிகளின் பங்குபற்றலுடன் அக்டோபர் மாதம் 30 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட அதேவேளை, UCSC இனது கேட்போர்கூடத்தின் அத்திவாரத்துக்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வும் அதே தினத்தில் இடம்பெற்றது.

அட்டவணை 25: உட்கட்டமைப்பு — ரூபா 000'

| உட்கட்டமைப்பு விபரம் | செலவினம் (ரூ.) | பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| சிற்றுண்டிச்சாலை மற்றும் நிருவாக கட்டடம் – கட்டம் I | 49,318 | 100% |
| UCSC கேட்போர்கூடம் மற்றும் விரிவுரை மண்டபம் | 26,500 | 30% |

## ஏனைய விபரங்கள்/ இவ் அறிக்கையுடன் தொடர்புடைய செயலாற்றல்

உள்நாடு மற்றும் சர்வதேச ரீதியில் பிரகாசிப்பதை அதிகரிப்பதற்காக UCSC இனது இணைய தளம் மற்றும் சமூக வலையமைப்பு ஊடாக UCSC இனது செயற்பாடுகள் பரப்புதல் செய்யப்படுகின்றன.

தகவல் தொழில்நுட்பக் கல்வியையும் உற்பத்திகளையும் எல்லைகளைத் தாண்டி கொண்டு செல்வது அதன் சமூகப் பொறுப்புகளில் ஒன்றாக UCSC கருதுகின்றது. UCSC ஆனது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் (SLBC) இணைந்து ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் காலை 9 மணி முதல் 10 மணி வரை சமூக நிகழ்ச்சியின் மூலமாக இப் பணியை தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது. மேலும், சர்வதேச ஒலிம்பியாட் தகவலியல் (IOI) உட்பட மென்பொருள் சார் போட்டிகளை நடாத்துவதற்காக UCSC தனது ஒத்துழைப்பினை கல்வி அமைச்சுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கிவருகிறது. தலைவர் மற்றும் பிரதித் தலைவர் உட்பட நான்கு அங்கத்ததுவ IOI அணி யூலை மாதம் 13-20 வரை தாய்வான் நாட்டில் நடாத்தப்பட்ட IOI'14 போட்டியில் பங்குபற்றுவதற்கு தெரிவுசெய்யப்பட்டதுடன், இதற்காக NSF மற்றும் 7StepsGlobe நிறுவனம் ஆகியவற்றுடன் UCSC நிறுவகமும் ஆதரவு வழங்கியது. இந்த அணியானது மே மாதம் 11 ஆம் திகதி நடாத்தப்பட்ட ஆசியா பசுபிக் இன்பொமெடிக்ஸ் ஒலிம்பியாட் (APIO) போட்டியிலும் போட்டியிட்டது.

பழைய மாணவர் சங்கத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்காக UCSC இனது பழைய மாணவர் சங்கக் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. Vmware vCloud suite மூலம் வலுவூட்டப்படுகின்ற மென்பொருள் சார் விவரிக்கப்பட்ட தரவு மையமொன்றைக் கொண்டுள்ள ஒரே அரச நிறுவனம் என்பதுடன், ஒரே கல்வி நிறுவனமும் ஆகும். 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய பாராளுமன்றக் குழுவிலும் (COPE) மற்றும் 2012 இன் ஆண்டறிக்கையைக் கொண்டும் உயர் கல்வி அமைச்சின் மூலமாக செயற்பாடுகள் மீளாய்வு செய்யப்பட்டன.

**கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்**

கொழும்பு பல்கலைக்கழகம்

2014 திசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறான இணைந்த ஐந்தொகை

| | 2014 | 2013 |
|---|---|---|
| <u>சொத்துக்கள்</u> | ரூ. | ரூ. |
| <u>நடைமுறையில்லாச் சொத்துக்கள்</u> | N.B.V | N.B.V |
| <u>ஆதனம், பொறி, உபகரணம்</u> | | |
| கட்டடம் | 138,479,074 | 71,371,639 |
| பொருத்துகள் | 87,801,965 | 74,846,459 |
| நூலகப் புத்தகங்கள், சஞ்சிகைகளும் | 1,008,686 | 973,843 |
| மோட்டார் வாகனங்கள் | 3,692,684 | 4,933,664 |
| மொத்தம் | 230,982,409 | 152,125,605 |
| மூலதன புனரமைப்பும் மேம்படுத்தலும் | 34,451,933 | 31,404,754 |
| நிர்மாணிப்பு - முடிவுறாத வேலை | 26,500,920 | 9,775,667 |
| <u>நடைமுறைச் சொத்துக்கள்</u> | | |
| பொருட்கள் இருப்பு | 2,755,377 | 3,198,314 |
| பெறவேண்டியவை, முற்கொடுப்பனவு | 68,937,373 | 88,669,647 |
| SIDA நிதி | | - |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 654,119,872 | 651,587,603 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 725,812,622 | 743,455,564 |
| மொத்தச் சொத்துக்கள் | 1,017,747,900 | 936,761,599 |

| | 2014 | 2013 |
|---|---|---|
| <u>சொத்துக்கள்/பங்குரிமை</u> | | |
| <u>மூலதனமும் ஒதுக்கமும்</u> | | |
| <u>மூலதனம்</u> | | |
| செலவிடப்படாத மூலதன மானியம் | 11,708,963 | 19,451,866 |
| செலவிடப்பட்ட மூலதன மானியம் | 235,503,117 | 113,563,832 |
| வெளி.நா. நிதி கருத்தி.– செலவிடப்படாதது | 9,096,416 | 2,720,033 |
| வெளி.நா. நிதி கருத்தி.– செலவிடப்பட்டது | 12,517,918 | 21,334,025 |
| வேறுபட்ட மானியம் | | |
| கொழும்பு பல்கலைக்கழக பங்களிப்பு | 8,155,714 | 8,155,714 |
| மொத்தம் | 276,982,128 | 165,225,470 |
| ஒதுக்கங்கள் | 403,940,980 | 464,395,995 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 3,000,000 | 3,000,000 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி | 128,472,862 | 70,067,477 |
| <u>நடைமுறையில்லா பொறுப்புக்கள்</u> | | |
| ஓய்வூதியப் பயன்கள் | 34,251,258 | 31,395,771 |
| <u>நடைமுறைப் பொறுப்புக்கள்</u> | | |
| ஏனைய சென்மதிகள், கொடுப்பனவுகள் | 171,100,672 | 202,676,886 |
| வங்கி மேலதிகப்பற்று | - | - |
| மொத்தம் | 171,100,672 | 202,676,886 |
| மொத்த சொத்துக்கள்/பங்குரிமை | 1,017,747,900 | 936,761,599 |

..........

பிரதி நிதியாளர்

இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பவற்றுக்கு பணிப்பாளர் சபையானது பொறுப்பாகவுள்ளது. பணிப்பாளர் சபைக்காகவும் அது சார்பாகவும் எம்மால் அங்கீகரிக்கப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது. 28-02-2015

..........

பிரதி பணிப்பாளர்

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்

## கொழும்பு பல்கலைக்கழகம்

### 2014 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த வருடத்திற்கான இணைந்த வரவு செலவுக் கணக்கு

| | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| <u>பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்</u> | | |
| <u>வருமானம்</u> | | |
| அரச மானியம் | 93,716,000 | 90,383,000 |
| நிறுத்தப்பட்ட வருமானம் - மானியங்கள் | 15,261,355 | 14,430,010 |
| ஏனையவை | 4,367,219 | 3,610,684 |
| | 113,344,574 | 108,423,694 |
| <u>பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - செலவு</u> | | |
| பணியாளர் கொடுப்பனவுகள் | 89,779,332 | 69,371,031 |
| போக்குவரத்துச் செலவுகள் | 161,441 | 623,097 |
| வழங்கல்கள் | 8,057,216 | 4,573,837 |
| ஒப்பந்தச் சேவைகள் | 37,313,552 | 33,428,209 |
| ஓய்வூதிய பயன்கள் | 15,252,053 | 16,183,766 |
| சந்தாக்கள், பங்களிப்புக்கள், அங்கத்துவ கட்டணம் | 108,890 | 105,530 |
| பணியாளர் அபிவிருத்தி | 211,000 | 19,000 |
| ஏனைய மீண்டெழும் செலவுகள் | 10,577,455 | 9,005,017 |
| தேய்மானம் | 21,418,266 | 16,818,989 |
| மொத்தம் | 182,879,205 | 150,128,476 |
| பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்ட பற்றாக்குறை | (69,534,631) | (41,704,782) |
| <u>விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டம்</u> | | |
| விஞ்ஞான முதுமாணி நிகழ்ச்சித்திட்டம் | 47,256,202 | 44,871,205 |
| வெளிவாரி பட்டங்கள் நிலையம் | 37,012,897 | 54,004,151 |
| கணினி சேவைகள் நிலையம் | 2,255,363 | 4,748,974 |
| உயர் தர டிஜிடல் ஊடக தொழில்நுட்ப நிலையம் | 788,354 | 1,054,794 |
| e கற்றல் நிலையம் | 11,285,752 | 10,384,270 |
| தொழில்சார் அபிவிருத்தி நிலையம் | (289,738) | (416,751) |
| விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்ட மேலதிக வருமானம் | 98,308,830 | 114,646,643 |
| கருத்திட்டங்கள் | | |
| வெளிநாட்டு நிதியிடப்பட்ட பொது கருத்திட்டம் | 35,302 | - |
| ICTer மாநாடு -2012 | 1,110,876 | 1,624,264 |
| IDRC Vertual கிராமம் | 199,944 | - 65,175 |
| கருத்திட்டங்களிலிருந்து மேலதிக வருமானம் | 1,346,122 | 1,559,089 |
| தீசஷ்ன | 867,901 | 644,080 |
| தேறிய மேலதிக வருமானம் /(பற்றாக்குறை) | 30,988,222 | 75,145,030 |

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்
### கொழும்பு பல்கலைக்கழகம்
### 2014 திசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான இணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2014 | 2013 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | ரூ. | ரூ. |
| வருடத்திற்கான மிகை/பற்றாக்குறை | 30,988,222 | 75,145,030 |
| ***சீராக்கல்கள்*** | | |
| தேய்மானம் | 32,924,670 | 29,786,429 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 3,686,567 | 4,693,425 |
| நிறுத்தப்பட்ட வருமானம் | (19,585,628) | (18,973,278) |
| முன்னர் பொறப்பட்ட மானியத்திலிருந்து மாற்றல் | (10,048,003) | (5,689,864) |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை இலாபம் | (190,806) | (358,575) |
| நாணயமாற்றில் கிடைப்பனவு | (408,592) | (521,282) |
| தொழிற்படு மூலதன மாற்ற மிகை/குறைவு | 37,366,430 | 84,081,885 |
| தொழிற்படு மூலதன மாற்றல் | (11,886,227) | 16,344,815 |
| தொழிற்பாட்டு நடவடிக்கை மூலம் தேறிய காசு உருவாக்கம் | 25,480,203 | 100,426,700 |
| முதலீட்டு நடவடிக்கை மூலம் காசுப்பாய்ச்சல் | | |
| ஆதனம், பொறி, உபகரணம் கொள்வனவு | (35,722,193) | (36,329,243) |
| உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் | (89,612,748) | (33,513,991) |
| ஆதனம், பொறி, உபகரணம் விற்பனை மூலம் பெற்றது | 196,600 | 365,000 |
| ஆதனம், பொறி, உபகரணம் புனரமைப்பும் மேம்படுத்தலும் | (6,133,904) | (3,775,562) |
| | (105,792,042) | 27,172,904 |
| நிதியிடல் நடவடிக்கை மூலம் தேறிய காசுப்பாய்ச்சல் | | |
| பெற்றுக்கொண்ட மூலதன மானியம் - அரசாங். | 15,000,000 | 25,759,000 |
| பெற்றுக்கொண்ட கருத்திட்ட மானியம்- உருவாக். நிதி | 41,343,330 | 673,230 |
| பெற்றுக்கொண்ட கருத்திட்ட மானியம் | 16,271,736 | 7,105,427 |
| கடந்த வருட சீராக்கல்கள் | 2,000 | - |
| முடிவடைந்த திட்ட மீதிகளிலிருந்து மாற்றல் | 1,068,757 | (1,790,632) |
| பணிக்கொடை செலுத்தியது | (1,150,778) | (934,588) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிகளிலிருந்து பெறுப்பனவுகள் | 35,380,673 | 11,978,456 |
| காசும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு/குறைவு | 2,123,676 | 69,963,797 |
| நாணயமாற்றில் கிடைப்பனவு (நட்டம்) | 408,592 | 521,282 |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவை | 651,587,603 | 581,102,523 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவை | 654,119,872 | 651,587,603 |

## கொழும்பு பல்கலைக்கழக கணினிக் கற்கை நிறுவகம்
## நிதிசார் முக்கிய அம்சங்கள்

| | ரூ. '000 | | | | |
|---|---|---|---|---|---|
| நிதி ஆண்டு | 2014 | 2013 | 2012 | 2011 | 2010 |
| அரச மானியம் - மீண்டெழும் | 93,716 | 90,383 | 91,802 | 83,102 | 65,381 |
| அரச மானியம் - மூலதனம் | 15,000 | 25,759 | 19,150 | 16,000 | 4,920 |
| பெறப்பட்ட மொத்த அரச மானியம் | 108,716 | 116,142 | 110,952 | 99,102 | 70,301 |
| மீண்டெழும் செலவு - பட்டதாரி நிகழ்ச்சி | 160,901 | 133,190 | 111,212 | 92,310 | 80,120 |
| மூலதனச் செலவு | 132,206 | 71,371 | 31,178 | 28,628 | 21,301 |
| மொத்தச் செலவு பட்டதாரி நிகழ்ச்சி | 293,107 | 204,561 | 142,390 | 120,938 | 101,421 |
| உருவாக்கப்பட்ட வருமானத்தின் பங்களிப்பு | 184,391 | 88,419 | 31,438 | 21,836 | 31,120 |
| உரு. மொத். வருமானத்தின் பங்களிப்பு - % | 78% | 37% | 16% | 14% | 25% |
| உரு. மொத். தேறி. வருமான. பங்களிப்பு - % | 163% | 63% | 28% | 28% | 62% |
| உருவாக்கப்பட்ட வருமானம் | 247,470 | 242,025 | 194,230 | 159,429 | 123,267 |
| மீண்டெழும் செலவு – விரிவாக்கல் நிகழ்ச்சிகள் | 124,627 | 102,173 | 82,390 | 80,197 | 73,313 |
| வெளிநாட்டு நிதி திட்ட. பெறப்பட்ட மானியம் | 9,713 | 9,341 | 5,639 | 6,202 | 93,581 |
| உள்வாரி மாணவர் எண்ணிக்கை | 850 | 879 | 737 | 737 | 739 |
| பணியாளர்களின் எண்ணிக்கை | 179 | 144 | 144 | 144 | 151 |
| மாணவரொருவருக்கான மீண்டெழும் கிரயம் ஆண்டுக்கு ( '000 ) | 190 | 152 | 151 | 125 | 108 |
| மாணவரொருவருக்கான மூலதன கிரயம் ஆண்டுக்கு ( '000 ) | 156 | 81 | 42 | 39 | 29 |
| பணியாளரொருவருக்கான கிரயம் வருடத்திற்கு ( '000 ) | 795 | 774 | 670 | 578 | 457 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | ඊසී/සී/යූසීඑස්සී/1/14/එෆ්ඒ | මබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2016 අප්‍රේල් දින. |

UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING
FINANCE
29 APR 2016

අධ්‍යක්ෂ,

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය

කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනයේ 2014 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 2002 අංක 01 දරන කොළඹ විශ්වවිද්‍යාලීය පරිගණක අධ්‍යයන ආයතනය නියමාවලියේ 23 වගන්තිය හා 1978 අංක 16 දරන විශ්වවිද්‍යාල පනතේ 108(1) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2015 නොවැම්බර් 12 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

UNIVERSITY OF COLOMBO SCHOOL OF COMPUTING
28 APR 2016
DIRECTOR'S OFFICE

එච්.එම්.ගාමිණී විජේසිංහ

විගණකාධිපති

පිටපත් :-

1. ලේකම් , මුදල් අමාත්‍යාංශය
2. ලේකම් , උසස් අධ්‍යාපන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
3. සභාපති , විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
4. උපකුලපති , කොළඹ විශ්වවිද්‍යාලය



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

මගේ අංකය
எனது இல.
My No. } ஈசீ/சீ/யூசீஎஸ்சீ/1/14/எப்ஏ

ඔබේ අංකය
உமது இல.
Your No. }

දිනය
திகதி
Date } 2015 நவம்பர் 12

பணிப்பாளர்,

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகம்

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி கற்கை நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமம்

முழுமையாகப் பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 1,235,809 கிரயத்திலான சொத்துக்கள் தொடர்ந்தும் நிறுவகத்தினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் நியாயமான பெறுமதியைக் காண்பிக்கும் வகையில் மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 50,077 தொகையான அட்டுறு செலவினங்கள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) பட்டப்பின் படிப்பு பாடநெறிக்காக 2015/2016 ஆம் ஆண்டிற்காக மீளாய்வாண்டின் இறுதியில் கிடைத்த மொத்த பாடநெறிக் கட்டணம் ரூபா 51,060,000 தொகையான போதிலும் நிதிக்கூற்றுக்களில் முற்பணமாகக் கிடைத்த பாநெறிக் கட்டணங்களாக ரூபா 51,082,500 வரை காணப்பட்டமையால் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 17,500 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான நிதிச் செயலாற்றல் அறிக்கையின் படி வெளிவாரி பரீட்சை நிலையங்களின் (EDC) மூலம் நடாத்தப்படுகின்ற Bachelor of Information Technology (BIT) பாடநெறியின் வருமானம் மற்றும் வெளிவாரி பரீட்சை நிலையத்தினால் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களில் குறிப்பிடப்பட்ட அந்த வருமானத்துடன் இணக்கஞ் செய்த போது ரூபா 1,867,934 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1978 இன் 16 ஆம் இல்கக பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 99(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தினால் உழைக்கப்பட்ட சகல வருமானங்களும் நிறுவக நிதியத்தின் பகுதியொன்றாக இருக்க வேண்டியிருந்ததுடன் 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் நிறுவகத்தினால் வைத்திய காப்புறுதி நிதியமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 4,739,294 தொகையான மீதியொன்று காணப்பட்டது.

## 2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த 05 வெளிநாட்டு செயற்திட்டங்களில் காணப்பட்ட ரூபா 11,559,430 தொகையான நிதிய மீதிகள் 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது செலுத்த வேண்டிய கணக்கின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் பல்வேறு காரணங்களினால் சேவை முடிவுறுத்தப்பட்ட நிறுவகத்தின் 7 உத்தியோகத்தர்களிடமிருந்தும் ஊழியர்களிடமிருந்தும் நிறுவகத்திற்கு அறவிடவேண்டியிருந்த ரூபா 234,874 தொகையான கடன் மீதி 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்பட்டதுடன் இந்தப் பணத்தை ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்தேனும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் செயற்படுத்தப்படுகின்ற தகவல் பாதுகாப்பு தொடர்பான செயற்திட்ட (Master of Science in Information Security (MSC in IS)) முதுமாணி பாட நெறியிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 30,000 தொகை 2015 ஆகஸ்ட் 31 வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 371 | முற்பணம் வழங்கும் போது உரிய செயற்பாட்டிற்கான மதிப்பீட்டின் படி போதியளவான நிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் 18 சந்தர்ப்பங்களில் 8 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 230,245 தொகையான முற்பணம் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) 2002 இன் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கை நிறுவக வழிகாட்டியின் 3(இ)(ஈ) பிரிவு | நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பட்டப்படிப்பு மற்றும் ஏனைய பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளவேண்டிய போதிலும் நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற 06 பாடநெறிகளுக்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

(இ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை

நிதியத்தை உருவாக்கும் போது திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 9,960,290 கூட்டுத்தொகையான நான்கு நிதியக் கணக்குகளுக்கு உரிய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 30,988,222 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 75,145,030 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 44,156,808 தொகை குறைவடைந்தமைக்கு ஊழியர் நிர்வாகச் செலவினம் ரூபா 20,408,301 இனால் ஒப்பந்தச் சேவைச் செலவினம் ரூபா 3,885,343 இனாலும் அதிகரித்தமையும் நிகழ்ச்சித்திட்ட வருமானம் ரூபா 16,337,813 இனால் குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் நிறுவகத்துடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறியதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 11,011,710 தொகை அறவிட வேண்டியிருந்ததுடன் அந்தப் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விரிவுரையாளர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 3,440,575 தொகையான உடன்படிக்கைப் பிணைமுறிகளின் பெறுமதிக்குரிய விரிவுரையாளர் தொடர்பான தகவல்களை கண்டறிவதற்கு முடியாமையின் காரணமாக அறவிடுதல் நிச்சயமற்றதாக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்காக போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

மூலதன மானியமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 3,103,213 தொகை மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் செலவிடப்படாது கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததடன் அந்த நிதியை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் சொத்துக்களை கைப்பற்றும் நோக்கத்தில் உருவாக்கப்பட்ட இரண்டு நிதியங்களில் ரூபா 4,843,802 கூட்டுத்தொகையான மீதி காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் நிதியத்தில் பெறுவனவுகளை விஞ்சி செலவு செய்யப்பட்டமை காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 6,137,408 தொகையான மறை மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக் கட்டுப்பாடு
(ஆ) உடன்படிக்கை மற்றும் பிணைமுறி
(இ) நிதிக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

(மொழிபெயர்ப்பு)

2015 திசம்பர் மாதம் 16ஆம் திகதி

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்லை.

**கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகத்தின் 2014 திசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மீது 2002 இன் கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவக சட்ட விதிகளின் 23 ஆம் பிரிவு மற்றும் 1978 ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவு ஆகியவற்றின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்**

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

குறித்துக் கொண்டேன்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

IDRC கருத்திட்டத்தின் சகல நிதிசார் செயற்பாடுகளும் 2008 ஆண்டினது கருத்திட்டத்தின் செயற்பாட்டுச் பணிகளும் முடிவடைந்ததைத் தொடர்ந்து முற்றுப்பெற்றன.

விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் 2005 இல் கொள்வனவு செய்யப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள், மடிக்கணினி மற்றும் மேசைக் கணினி என்பனவாகும். இச் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் ஒப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) உரிய சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) பாடநெறிக் கட்டண முற்கொடுப்பனவு குறைவாக அன்றி கூட்டியே காட்டப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ரூ. 17,500.00 தொகை பாடநெறிக் கட்டண முற்கொடுப்பனவு, நூலக வைப்பாகும்.

**2.2.3 இணக்கம் காணப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள BIT பாடநெறி வருமானம் வெளிவாரி பரீட்சைகள் நிலையத்தினால் வழங்கப்பட்ட வருமானத்தை விட ரூ. 1,867,934.00 கூடுதலான போதிலும், எமக்கு பணமாக வழங்கப்பட்டது சரியான தொகையாகும். ஆனாலும், வெளிவாரி பட்டப்படிப்பு நிலையமானது சம்பந்தப்பட்ட தகவல்களை இற்றைப்படுத்துவது சம்பந்தப்பட்ட மாணவர்களால் கொடுப்பனவு வவுசர்கள் அப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டதன் பின்பு என்பதனால் ஆகும்.

**2.3 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவகத்தின் மூலம் பேணிச்செல்லப்படுகின்ற ஊழியர் மருத்துவக் காப்புறுதித் திட்டத்திற்கு தேவையான நிதியானது அங்கத்தவர்களினால் 40% உம் நிறுவகத்தினால் 60% உம் என்பதாக செலுத்தப்படுகின்றது. நிறுவகத்தினால் வழங்கப்படும் 60% ஆன தொகையானது கொழும்புப் பல்கலைக்கழக கணினி கற்கைகள் நிறுவகத்தினால் நடாத்தப்படும் வெளிவாரி பட்டப் படிப்பு மற்றும் பட்டப்பின்படிப்பு பாடநெறிகள் மூலம் உழைக்கின்ற நிதியோடு சம்பந்தப்பட்ட பாடநெறிகளின் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்படுகின்ற தொகையிலிருந்து வழங்கப்படுகின்றது. இம் மருத்துவக் காப்புறுதித் திட்டமானது, வருடாந்தம் நிறுவகத்தின் நிதிசார் குழுவின் சிபாரிசுடனும் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடனும் பேணிச்செல்லப் படுகின்றது.

(இ)i) Equipment Replacement Fund ரூ. 3,252,477.00

இந் நிதி 2015இல் மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

ii) Staff Development Fund ரூ. 180,629.00

இந் நிதி பணியாளர்களின் பயிற்சியளிப்புக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

iii) Hardware 2 software Fund ரூ. 1,891,325.00

இந் நிதி 2015இல் மூலதன சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

iv) BIT Development Fund ரூ. 3,315,859.00

இந் நிதி தொடர்பாக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன்.

**2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

**(அ)** i) CDF Lab Project – ரூ. 2,336,374.00

மேற்படி கருத்திட்டத்தின் மீதியான நிறுவனத்தின் Project பிரிவில் உள்ளதுடன், 2015 ஆம் ஆண்டினுள் மேற்படி மீதி பயன்படுத்தப்பட்டுள்ளது.

ii) e – Health Project ரூ. 3,695,641.00

மேற்படி கருத்திட்ட மீதியானது நிறுவனத்தின் CSC பிரிவில் உள்ளதுடன், 2015 ஆம் ஆண்டில் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

iii) IDRC Project ரூ. 1,076,325.00

மேற்படி கருத்திட்ட மீதியானது நிறுவனத்தின் CSC பிரிவில் உள்ளதுடன், 2015 ஆம் ஆண்டினுள் அது சம்பந்தப்பட்ட பிரிவினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

iv) GIS project – ரூ. 1,578, 739.00

மேற்படி கருத்திட்ட மீதியானது நிறுவனத்தின் Project பிரிவில் உள்ளதுடன், 2015 ஆம் ஆண்டினுள் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

v) Nelc Project ரூ. 2,932,351.00

மேற்படி கருத்திட்ட மீதியானது நிறுவனத்தின் Project பிரிவில் உள்ளதுடன், 2015 ஆம் ஆண்டினுள் மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**(ஆ) அறவிடவேண்டிய கடன் மீதிகள்**

**I) எஸ்.எஸ். பஹிதரன் - இடர் கடன் ரூ. 137,648.00**

அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகையுடன் இடன் கடன் மீதியான ரூ. 137,648.00 ஆன தொகையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**II) பீ.எஸ்.எஸ்.ஜே. பியசிறி – ஊழியர் கடன் ரூ. 4,930.00**

குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அறவீடு செய்ய முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

**III) எம்.சி.ஜீ. லியனகே - இடர் கடன் ரூ. 30,560.00**

குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அவரது பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

IV) எஸ்.சி.ஜீ.எம்.டீ. சில்வா - இடர் கடன் ரூ. 55,836.00

குறிப்பிடப்பட்ட கடன் தொகையை அவரது பல்கலைக்கழக சேமலாப நிதியிலிருந்து அறவிட்டுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

V) ஜீ.எஸ்.டீ. பீரிஸ் – பண்டிகை முற்பணம் ரூ. 2,800.00

குறிப்பிடப்பட்ட பண்டிகை முற்பணத் தொகையை அறவீடு செய்ய முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

VI) எஸ்.ஏ.எம். பிரியதர்ஷனி – பண்டிகை முற்பணம் ரூ. 2,100.00

குறிப்பிடப்பட்ட பண்டிகை முற்பணத் தொகையை அறவீடு செய்ய முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

VII) ரீ.எஸ். பெர்னாந்து – பண்டிகை முற்பணம் ரூ. 1,000.00

குறிப்பிடப்பட்ட பண்டிகை முற்பணத் தொகையை அறவீடு செய்ய முடியாது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவளிப்புச் செய்யப்பட்டுள்ளது

## 2.5 சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காதிருத்தல்

(அ) முற்பணங்கள் வழங்கப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் அதற்காக முறையான மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனாலும், சில சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் பெற்றுக்கொள்ளும் போது திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் யாவற்றையும் பூர்த்தி செய்ய முடியாத காரணத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத் தொகையில் ஓரளவு மீளச் செலுத்தப்பட்டுள்ளது. இதை குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

(ஆ) குறிப்பிட்ட பாடநெறிக்காக பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினது அங்கீகாரத்திற்கான விண்ணப்பம் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

குறித்துக் கொண்டேன்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 ஒப்பந்தங்கள் மற்றும் பிணைகள் மீறுதல்

(அ) ஒப்பந்தங்கள் மற்றும் பிணைகளை மீறியுள்ளவர்கள் பற்றிய தகவல்களை காட்டுகின்ற வகையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) எஸ்.ஜே. பஹீரதன் அவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய தொகை ரூ. 3,440,575.75 ஆகும். அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், அவர் வதிவிட முகவரியில் இருந்து நீங்கிச் சென்றுள்ளதால், அடுத்தகட்ட நடவடிக்கையாக அவருக்கு எதிராக பிரதி பதிவாளர் அவர்களால் கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி உள்ளக கணக்காய்வாளர் அவர்களை சாட்சியாக கொண்டு, கொழும்பு மோசடி விசாரணைப் பிரிவுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு ஏற்ப, அதன் இலக்கம் 02 பிரிவின் மூலம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவர் நாட்டை விட்டு ஓடியுள்ளார் என்பது அதன்போது தெரியவந்தது. தற்போது இது தொடர்பாக சர்வதேச சிவப்பு பிடியாணையொன்றை வெளியிடச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது சம்பந்தமாக சட்டமா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தி உள்ளதுடன், இதற்கு இணைந்ததாக அவரது சேமலாப நிதியின் 2014.12.31 ஆம் திகதியுள்ள மீதியான ரூ. 1,749,660.37 தொகையை நீதிமன்றத்திற்கு அறிவிப்புச் செய்து அறவீடு செய்து கொள்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4.2 நிதியங்களின் குறைவான பயன்பாடு

சம்பந்தப்பட்ட நிதிகள் 2015 ஆம் ஆண்டினுள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### 4.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை

(அ) i) Equipment Replacement Fund ரூ. 3,252,477.00

இந் நிதி 2015 ஆம் ஆண்டினுள் மூலதன பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

ii) Hardware 2 software Fund ரூ. 1,891,325.00

இந் நிதி 2015 ஆம் ஆண்டினுள் மூலதன பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இது நிதி அளிப்புக்களை விட மீறிச் செலவு செய்யப்பட்டதொன்றல்ல, உழைக்கும் நிதியை நிறுவகத்தின் மூலதன செலவுகளுக்கு பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட பிரிவுகளிலிருந்து மாற்றும் போது கணக்குப் பதிவுகளில் ஏற்பட்ட தவறொன்றாகும். இதனை சீராக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

05. (அ) சொத்துக்கள் கட்டுப்பாடு

குறித்துக்கொண்டேன்.

(ஆ) ஒப்பந்தங்கள் மற்றும் பிணைகள்

குறித்துக்கொண்டேன்.

(இ) நிதிக் கட்டுப்பாடு

குறித்துக்கொண்டேன்.

இங்கனம் – விசுவாசமுள்ள

(கையொப்பம்)
பேராசிரியர் ஜீ.என். விக்கிரமநாயக்க
பணிப்பாளர்

பிரதிகள்:

1. செயலாளர், நிதி அமைச்சு
2. செயலாளர், பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
3. தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
4. உப வேந்தர், கொழும்புப் பல்கலைக்கழகம்